# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

புதியபூமி

சுற்று 05 ஒக்ரோபர்/நவம்பர் 1998 பக்கம் 12 விலை ரூபா 10/= சுற்றி 24

## என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்!

- யாழ் குடாநாட்டிற்கு போக்குவரத்து இல்லை.
- வன்னிக்கு உணவும் மருந்தும் இல்லை.
- மட்டக்களப்பிற்கு மின்சாரம் இல்லை.
- மலையகத்தில் எரியூட்டி இனவெறியாட்டம்.
- யுத்தச் செலவு ஆறாயிரம் கோடியாக அதிகரிப்பு.
- தனியார் மயத்தால் தொழிலாளர்-விவசாயிகள் தவிப்பு.
- வரிகளால் வாழ்க்கை செலவு உச்சத்தில்.
- வேலை இல்லை வீடு இல்லை உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை.
- தற்கொலையில் முதலாம் இடம்
- சமூகச் சீரழிவுகளில் இரண்டாம் இடம். இன்னும் . . . . .

## பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு சமாதானம் ?

நாடு அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. யுத்தம் அதற்கான காரணியாகி உச்ச நிலையை அடைந்து நிற்கிறது. பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு சமாதானம் என்பதெல்லாம் வெறும் பேச்சுக்களாகவே சென்று கொண்டிருக்கின்றன. யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நியாயமான அரசியல் தீர்வு கண்டு சமாதானத்தை நிலை நிறுத்தும் தைரியம் அரசாங்கத்திடமோ அன்றி எதிர்கட்சியிடமோ இல்லை.

அதேவேளை பௌத்த சிங்களப் பேரினவாதம் சுத்த இராணுவக் கண்ணோட்டத்துடன் இணைந்து யுத்தத்தின் மூலம் இனப் பிரச்சினையை இல்லாமல் செய்து விடலாம் என்று நம்பிச் செயல்படுகிறது. இத்தகைய சிந்தனைக்கும் செயல்பாட்டிற்கும் வலிமை சேர்த்து அவற்றை சிங்கள மக்கள் மத்தியில் சமூகமயப்படுத்துவதற்காக ஆறு பேரினவாத அமைப்புகளும் நான்கு பௌத்த பீடங்களும் தத்தமது நிலைகளில் இருந்து கொண்டு செயல் படுகிறார்கள். மேற்குறித்த ஆறு பேரினவாத அமைப்புகள் சிலவற்றில் உயர் நிலை ராணுவ அதிகாரிகள், அறிவு ஜீவிகள், வர்த்தகர்கள், தீவீரவாத இனவாத தேரர்கள் போன்றோர் செயல்பட்டு வருகிறார்கள். இவர்களது முக்கிய ஆலோசராக சம்பிக்க ரணவக்கவும் வேறு சிலரும் இருந்து வருவதாக அறிய முடிகிறது. இத்தகைய பேரினவாதிகளின் செல்வாக்கு அரசாங்கத்திற்கு உள்ளும் குறிப்பாக முக்கிய அமைச்சர்களிடமும் ஏனையோரிடமும் காணப்படுகிறது. அத்துடன் எதிர்க் கட்சியிடமும் செல்வாக்குச் செலுத்தகிறார்கள். புதிய இடதுசாரி முன்னணியாகி உள்ள இடதுசாரிக் கட்சிகள் தவிர்ந்த ஏனைய இடதுசாரிக் கட்சிகள் என்பவை கூட இப்பேரினவாத சக்திகளின் செல்வாக்கை மீறிச் செல்லத் தயாரில்லாத நிலையிலேயே இருந்து வருகின்றமையைக் காணலாம்.

இப் பேரினவாத சக்திகள் எவ்வகையிலும் சாதாரண சிங்களத் தொழிலாளி விவசாயி வர்க்கத்தையோ அன்றி உழைக்கும் சிங்கள மக்களையோ பிரதிநிதித்துவம் செய்யவில்லை. மாறாக சிங்கள மக்களிடையே உள்ள நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு சக்திகளாகவே காணப்படுகின்றனர். இவர்கள் பழமை பேணுவதிலும் வரலாற்றைத் திரித்து தமக்கேற்ற தாக்கிக் கொள்வதிலும் தமிழ்ப் பழமைவாதிகளுக்கும் தேசிய வாதிகளுக்கும் எவ்வகையிலும் குறைந்தவர்கள் இல்லை என்பது கவனத்திற்குரியதாகும். இத்தகைய சக்திகள் யுத்தத்தின் மூலம் நாளுக்கு நாள் வலிமையடைந்து வரும் சூழலில் எவ்வாறு சமாதானம் வந்து கொள்ள முடியும் என்பதே பிரதான கேள்வியாகும்.

இந் நிலையில் தான் நாட்டின் வியாபார வர்த்தக சமூகத்தினர் அரசியல் கட்சிகளை அழைத்து சமாதானத்திற்கான ஒரு முன் முயற்சியில் இறங்கி உள்ளனர். பத்து அம்சக் கோரிக்கைகளை முன்மொழிந்து அரசாங்கம் எதிர்க்கட்சி என்பவற்றை ஒரே இடத்திற்கு கொண்டு வந்து அழிந்த கொண்டிருக்கும் நாட்டைக் காண்பித்து அதற்கு ஒரு பரிகாரம் தேட முற்பட்டுள்ளனர். இன்றைய நெருக்கடி மிக்க சூழலில் அவர்களது இம் முயற்சியை நிராகரிக்கவோ எதிர்க்கவோ அவசியம் இல்லை. வியாபார வர்த்தக சமூகத்தினரின் அடிப்படை நோக்கம் பின்னணி அவர்களது வர்க்க நெறி முறைகள் பற்றி மாக்சிய வாதிகளும் இடதுசாரி சக்திகளும் தெளிவுடனேயே உள்ளனர். அவர்கள் முன்வைத்த பத்து அம்சங்களில் பலவற்றை நாம் கணக்கில் கொள்ள அவசியம் இல்லை. நமது அக்கறையாவும் யுத்தமாக்கப் பட்டுள்ள இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வும் அதற்கான பேச்சு வார்த்தையும் அதன் ஊடான சமாதானமுமேயாகும். இன்றைய நிலையில் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்குத் துணைபோகாமலும் அவர்களது சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமலும் பேச்சுவார்த்தைக்கான சூழலை வர்த்தக சமூகத்தினர் முன்னெடுப்பதை எவ்வகையிலும் நிராகரிக்க முடியாது. முடிந்தளவுக்கு அதன் சாதகமான அம்சங்களுக்கு ஆதரவும் ஆலோசனைகளும் வழங்குவதே சரியான நிலைப்பாடாகும். ஆனால் அரசாங்கம் எதிர்க்கட்சி மற்றும் உள்ளோர் பேரினவாதம் கீறிடும் கோடுகளைத் தாண்டிச் செல்வார்களா என்பதே முக்கிய கேள்வியாகும்.

## பசறைத் தொழிலாளர் போராட்டம் வெற்றி ஐக்கியமும் உறுதியும் அடிப்படைக் காரணம்

பசறை குரூப் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்துள்ளது. 40 நாட்களுக்கு மேல் நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதும் பங்களா எரிப்புச் சம்பவத்திற்கு பிறகு தொழில் அமைச்சர் செனவிரட்னவின் தலையீட்டுடன் ஒக்டோபர் 28ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தொழிற் சங்கங்களின் கோரிக்கைக்கு பசறை குரூப்பை நிர்வகிக்கும் அப்புகஸ்தென்ன பிளாண்டேசன் கம்பெனி இணங்கியுள்ளது.


தொழிலாளர்களின் அதிருப்தி, கண்டனத்திற்கு ஆளாகிருந்த குணதிலக்க என்ற தோட்டத் துரையை தொழிலாளர்களுடன் நேரடி தொடர்பில்லாத குரூப் முகாமையாளராக மட்டும் இயங்க அனுமதிப்பது என்ற முடிவு பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்டது. அதாவது இதுவரையும் அவர் குரூப் முகாமையாளர் என்ற பதவியையே வகித்தபோதும் அவரின் பதவியின் கடமைகளுக்கு அப்பால் தொழிலாளர்களை நேரடியாக நிர்வகிக்கும் கடமைகளை செய்து வருவதுடன், தொழிலாளர்கள் மீது அடாவடித்தனங்களை புரிந்து வந்ததால் தோட்டத் தொழிலாளர்களை நிர்வகிக்கும் துரைப் பதவியிலிருந்து இடமாற்றம் செய்யபடவேண்டும் என்றே கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. சர்ச்சைக்குரிய குணதிலக்க தோட்டத் தொழிலாளர்களை நேரடியாக நிர்வகிக்கும் துரையாக நியமிக்கப்படவில்லை என்றும், அவர் குரூப் முகாமையாளராக மட்டுமே இருப்பார் என்றும் கம்பெனி சார்பில் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் தொழிலாளர்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கான உறுதியினையும் கம்பெனி வழங்கியுள்ளது.

இந்த முடிவுகளை அடுத்து தொழிலாளாகள் வேலைநிறுத்தத்தை கைவிட்டு வேலைக்கு திரும்புவதென முடிவெடுத்துள்ளனர். தோட்டத்துரையின் பங்களா எரிக்கப்பட்டதை அடுத்து கைது செய்யப்பட்ட 25 தொழிலாளர்களை சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளில் தொழிலாளர்கள் இறங்கியுள்ளனர்.

இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தில் விவசாய தோட்டத் தொழிலாளர்கள் சங்க தலைவர் கிருஸ்ணசாமி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பிரமுகர் வேலாயுதம் ஆகியோரின் பங்களிப்புகளை குறைத்து மதிப்பிட முடியாது. ஐ.தே.கயின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரளை, ஊவாமாகாண முன்னாள் முதலமைச்சர் பேர்ஸி சமரவீர ஆகியோரின் உறவினரும். நீதிவான் ஒருவரின் கணவருமான சர்ச்சைக்குரிய மேற்படி தோட்டத் துரை செல்வாக்கு மிகுந்த நபராக இருந்தபோதும் 'தொழிலாளர்களும், தொழிற்சங்கங் களும் அடிபணியாமல் இருந்தமையே போராட்டத்தின் வெற்றிக்கு மிகவும் முக்கியமான காரண மாகும்.

ஆனால் ஆரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இ.தொ.கா.தலைவர்....

(தொடர்ச்சி 11ம் பக்கம்)




மலையகத்தில் ஓர் அதிசயம்

## தேச விரோத சக்திகள்

கண்டி அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்த தேரர் தலைமையில் இடம் பெற்ற ஒரு கூட்டத்தில் அஸ்கிரிய பீடத்தினர் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர். அவற்றை ஜனாதிபதிக்கும் ஏனைய அரச உயர் நிலையாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளனர். இந்திய வம்சாவழிப் பேரவையை தேச விரோத அமைப்பாகக் கொண்டு உடனே அதனைத் தடைசெய்ய வேண்டும். மலையக மக்களுக்கு. தனியான பிரதேச செயலாளர்கள் பிரிவு, கிராமசேவகர் பிரிவு ஏற்படுத்தக் கூடாது. காணி வீடு வழங்குவதும் தனியான கல்விப் பீடங்கள் அமைப்பதும் நிறுத்தப்பட வேண்டும். நுவரேலியாவில் சீதா எலியாவில் இராமர்புரம் அமைக்க வழங்கவுள்ள 30 ஏக்கர் நிலத்தை வழங்கக் கூடாது. இத்தீர்மானங்கள் மூலம் சுட்டப் படுவது பேரினவாத வெறிக் கூச்சல்கள் தான் என்பதை சிறு குழந்தையும் புரிந்து கொள்ளும். இத்தகைய பீடாதிபதிகளிடம் தான் அரசாங்கம் தீர்வுப் பொதியின் மூலமான அரசியல் தீர்வுக்கு ஆசியும் ஆதரவும் வேண்டிநிற்கிறது. அரசாங்கத்தை மிக விசுவாசமாக ஆதரித்து நிற்கும் இந்திய வம்சாவழிப் பேரவையினரை தேச விரோத சக்திகள் என முத்திரையிடும் அஸ்கிரிய பீடத்தினர் யுத்தத்தின் மூலம் இனப் பிரச்சினையை இல்லாதொழிக்க நிற்கும் பேரினவாத அமைப்புகளுக்கு ஆசியும் அருளுரையும் வழங்கி பிரீத் நூல் கட்டுவது தேச விசுவாசமாம். அத்தகைய அமைப்புகள் ஆறினை இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் அடையாளம் கண்டு அவற்றின் தேசவிரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும் எதிர்த்தும் வருகின்றன. அவையாவன 1.பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி. 2.வீரவிதான. 3.சங்கசபா 4.சிங்கள பாதுகாப்பு முன்னணி. 5.சிங்களவர் முன்னணி 6.பூமிபுத்திர கட்சி. இவை வெளிப்படையான பேரினவாத அமைப்புகளாகவும் தீவிரமாக இயங்கி வருபவையாகவும் உள்ளன. இவற்றை விட வெவ்வேறு அளவுகளில் சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்றவாறு பேரினவாதம் பேசிவரும் அமைப்புகளும் கட்சிகளும் நாட்டில் இருக்கவே செய்கின்றன. அதிகாரத்தில் இருப்பவர் எவராயினும் அவர்களிடமும் இதே பேரினவாதக் கருத்துக்களே உறைந்து காணபடுகின்றன. எனவே நாட்டின் வளங்களை உறுஞ்சி உண்டு கொழுத்து உயர்வர்க்கமாகி வெள்ளை உடையிலும் காவி அங்கியிலும் பௌத்த சிங்களத்தின் பெயரில் நச்சுக் கருத்துக்களைப் பேரினவாதப் பேச்சுக்களாக்கி வருவோரை சிங்கள உழைக்கும் வர்க்கம் உரியவாறு அடையாளம் காண்பதும் அத்தகைய சக்திகளை எதிர்ப்பதும் நிராகரிப்பதும் அடிப்படைத் தேவையாகிறது. இத்தகைய தேச விரோத சக்திகள் முறியடிக்கப்படாத வரை இந்நாட்டிற்கு மக்களுக்கும் எந்த வித விமோசனமும் ஏற்படமாட்டாது.

நன்றி - நூலகத்திட்டம்



# ராகலையில் மலசலகூடம் மூன்றடுக்கு வீடாகிறது

## பிரதேச சபை மௌனம்

நுவரெலியா-மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் வலப்பனை பிரதேச சபைக்குள் பிரதானமாக விளங்கும் இராகலைப் பகுதியில் நுவரெலியா செல்லும் வழியில் இராகலை வீதி அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு முன்னாலும், இராகலை பொலிஸ் நிலையத்துக்கு கீழ்ப்புறமாகவும் முன்னால் CGR வீடுகளுக்கு அருகாமையிலும் அமைக்கப் பட்டிருந்த மலசலகூடம் இன்று மூன்று மாடி வீட்டுக்கானத் திட்டத்தின்கீழ் முதலாம் மாடிக்கான வேலைகள் அனைத்தும் நிறைவெய்தி விட்டன. இங்கு முக்கியமான விடயம் யாதெனில் அவ் மலசலகூடம் திருத்தி அமைக்கப்பட்டு ஒரு வருடக் காலப்பகுதிலேயே அது தகர்க்கப்பட்டது. அதைத் தகர்த்தது குறித்து இது வரையிலும் பிரதேச சபை எந்த விதமான நடவடிக்கைகளையும் எவர் மீதும் எடுக்கவில்லை. காரணம், மலசலகூடத்தினைத் தகர்த்தவர்கள் அனைவரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நெருங்கிய ஆதரவாளர்கள். அது அவ்வாறு இருக்க மலசலகூடத்தினை தகர்த்து அந்நிலத்தினை இன்று இராகலை பஸ் நிலையக் கடைப்பகுதிகளில் ஒன்றான பலசரக்குக் கடை உரிமையாளர் ஒருவருக்கு விற்கப்பட்டு மூன்று மாடிகளுக்கான வேலைப்பாடுகள் நடந்தேறுகின்ற வண்ணம் உள்ளது. இச் செயற்பாட்டின் காரணமாக அவ் இடத்தினில் வசிக்கும் மலசலகூடம் அற்றவர்கள். பெரும் பாதிப் படைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அது மாத்திரம் அல்ல, இராகலையிலிருந்து உடப்புஸல்லாவ செல்லும் பாதையின் கீழ்புறமாகவும், இராகலை முஸ்லிம் பள்ளிவாசலுக்கு எதிர்புறமாகவும் 'லக்மாலி' திரையரங்குக்குப் பின்புறமாகவும் பிரதேச சபையினால் கிணறு ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இது இராகலைப் (நகர்)பகுதியில் உள்ளவர்களுக்கு குடிநீருக்காகவும், குளியலுக்காகவும் பயன்படுத்தும் முக்கியமான கிணறாகக் காணப் பட்டது. இக்கிணறு இன்று ஒரு தனிநபரினால் ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடத்தினில் இரண்டு மாடி வீடு நிர்மாணிக்கப்பட்டது. அந்நபரும் பொதுஜன ஐக்கிய முன்னனியின் ஆதரவாளராவார். இது சம்பந்தமாகவும் எந்த ஒரு நடவடிக்கையும் சட்டபூர்வமாக எடுக்கப்படாமல் இருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும். இதன் காரணமாக அப்பகுதி மக்கள் இன்று மலசலகூடத்துக்கும், குடிநீருக்கும் போராட வேண்டியுள்ளது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று கூறப்படுகிறது. ஆனால் இவ்வாறு இழைக்கப்படுகின்ற மனிதாபிமானமற்ற விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரதேச சபை ஏன் இன்று வாய்ப் பேசாது இருக்கின்றது. அதுவும் சாதாரணமாக ஒரு தோட்டத்-தொழிலாளியோ அல்லது நாள் கூலி வேலை செய்யும் ஒரு கடும் உழைப்பாளியோ அரை அடி நிலத்தினில் தஞ்சம் புகும் போது சட்டத்தையும் 'ஜனநாயகத்தையும்' முன்நிறுத்தி வழக்காடுமன்றம் செல்லும் பிரதேச சபை இன்று வாய்ப்பேசாது இருப்பது ஏன்? அந்நபர்கள் அனைவரும் பொதுஜன ஐக்கிய முன்னனியின் ஆாரவாளர்கள் என்றபடியாலா? அவ்வாறு இருப்பின் இன்றைய அரசாங்கம், ஒரு சோசலிஷ ஜனநர்யக நாடு என்றுத் தம்பட்டம் அடிப்பதும், ஜனநாயகத்தை காக்கின்றோம்' என்றுக் கூறித் திரிவதும் எந்த அளவு நியாயமானதாகும்.?

**ராகலை ரவி**

# நாலு நடக்கும் உலகிலே

## சுயசார்பு என்றால் பின்னோக்கிய பார்வையாம்!

சோவியத் யூனியனின் மீது தங்கியிருந்த காரணத்தால் தமது பொருளாதாரங்களைச் சீராக விருத்தி செய்யாத நாடுகள் பல இருந்துள்ளன. சோவியத் யூனியனின் சரிவு இந்த நாடுகளின் பொருளாதாரத்தில் உடனடியான நெருக்கடிக்கு வழி ஏற்படுத்தியது. ஆயினும் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கியூபா, வடகொரியா இரண்டுமே தாக்குப்பிடித்துள்ளன. 1990க்குப் பிறகு முன்னாள் சோஷலிஸ நாடுகளின் நிலையுடன் கிழக்காசிய நாடுகளை ஒப்பிட்டு மகிழ்ந்தவர்கள் இப்போது வாயடைத்து நிற்கிறார்கள்.

வடகொரிய அரசாங்கம் அண்மையில் தனது 50ம் தேசிய விடுதலை நாளைக் கொண்டாடிய போது தென்கிழக்காசிய நிலை பற்றிக் குறிப்பிட்டு, சுயசார்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. இது அமெரிக்கச் செய்தி நிறுவனங் களுக்குப் பிடிக்கவில்லை. வடகொரியாவின் சுயசார்பு கொள்கையை 'பின்னோக்கிய', 'தனிமைப் படுத்துகிற' போக்கு என்று அவர்கள் போலவே இவர்களும் செய்தி வெளியிடுகிறார்கள். நமது திறந்த பொருளாதார அனுபவம் என்ன?

சிலர் மற்றவர்களது தவறுகளினின்றும் கற்கிறார்கள்.
சிலர் தங்களுடைய தவறுகளினின்று மட்டுமே கற்கிறார்கள்.
வேறு சிலர் எவருடைய தவறுகளினின்றும் கற்பதே இல்லை.
நம் செய்தி ஏடுகள் மூன்றாவது ரகம் என்பது தெரிந்தது தானே.

## நகரத்து மக்கள் நஞ்சையே சுவாசிக்கின்றனர்

இன்று நாட்டில் ஓடும் வாகனங்களில் பெரும்பாலானவை டீசல் எரிபொருளில் ஓடுகின்றன. எஞ்சினில் டீசல் சரியாக எரிக்கப்பட்டாலும் அதிலிருந்து வரும் சில பொருட்கள் புற்றுநோயை உண்டாக்கக்கூடியன. பெற்றோல் எஞ்சின்கள் சீராக இயங்கக் காரீயக் கூட்டுப்பொருள்கள் அதில் சேர்க்கப்படுகின்றன. அதுவும் பல நோய்கட்குக் காரணமாகிறது. எஞ்சின் புகையில் நச்சுப்பொருட்களை மட்டுப்படுத்தும் சட்டங்கள் மேலை நாடுகளில் நடைமுறையில் இருந்தும் கூட, வாகனப் புகைக்கு எதிரான வெகுசன உணர்வு பல நாடுகளில் வலுப்பெற்று வருகிறது.

இந்தியாவில் பேரளவிலாவது வாகனப் புகை மீதான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இலங்கையில் எந்த விதமான கட்டுப்பாடும் நடைமுறையில் இல்லை. கடும் புகை கக்கும் டீசல் வண்டிகளை ஒழுங்காக நமது வீதிகளில் காண்கின்றோம். இவற்றின் விளைவாக சன நெருக்கமுள்ள நகரங்களிலெல்லாம் காற்று விஷமாகிறது. இந்த விஷக்காற்றைச் சுவாசிக்கிற மக்களிடம் போய் சிகரெட் புகைப்பதன் தீமைகள் பற்றி அரசு பிரசாரம் செய்கிறது.

## வீதி ஒழுங்கு பற்றிய உபதேசங்கள்

டெய்லி நியூசில் வீதி ஒழுங்கு பற்றிய கடிதங்களும் கட்டுரைகளும் அண்மைக் காலமாக வந்துகொண்டிருக்கின்றன. பாதசாரிகள் உரிய இடங்களில் தெருவைக் கடப்பதில்லை என்று சிலரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாதசாரிகள் உரிய இடங்களில் தெருவைக் கடக்கும் விதமாக அங்கு வாகனங்கள் நிறுத்தப்படுகின்றனவா?

தெருக்களை அவதானிக்கும் எவருக்குமே வீதி ஒழுங்கை மீறுவோர் விலை கொண்ட வலுமிக்க வாகனங்களை ஓட்டுவோரே என்பது தெரியும். ஆனாலும் உபதேசம் பாதசாரிகட்கு மட்டுமே.

முதலில் வீதி ஒழுங்கை மீறும் வாகனம் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மீறலுக்கும் ஒரு கிழமைக்கு பொலிசார் தடை செய்யட்டும். இதனால் ஒரே ஒருசிக்கல் ஏற்படலாம். ராணுவ பொலிஸ் வாகனங்களையே தெருவில் காண முடியாமற் போகலாம்.

## அமெரிக்க சனாதிபதி தண்டிக்கப்பட வேண்டிய காரணம்

வெள்ளை மாளிகையில் பணியாற்றிய ஒரு இளம்பெண்ணுடன் பாலுறவு கொண்டதற்காகவும் அதை மூடிமறைப்பதற்காகவும் அமெரிக்கச் சனாதிபதி பில் கிளின்ற்றன் பதவி விலக வேண்டும் என்று அமெரிக்க எதிர்கட்சியினர் மற்றும் செய்தி நிறுவனத்தினர் வற்புறுத்துகிறார்கள். கிளின்ற்றன் போலவோ கிளின்ற்றனை விட மோசமாகவோ பெண்கள் விடயத்தில் நடந்து கொண்டவர் கென்னடி, என்பது ஒரு முக்கியமான உண்மை. இந்த விடயத்துக்காக பதவி விலகுவது நியாயம் என்றால் எத்தனையோ பேர்களுடைய உயிர்களை எந்த நியாயமான காரணமும் இல்லாமல் கொல்வதற்கு ஆணையிட்ட அமெரிக்கச் சனாதிபதிகளுள் ஒவ்வொருவருக்கும் எத்தனை கொலைகட்கான மரண தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்க வேண்டும்?

கிளின்ற்றனும் மொனிக்காவும் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதுகிற எங்கள் நாளேடுகள் அண்மையில் அமெரிக்கா சூடானிலும் ஆப்கானிஸ்தானிலும் வீசிய குண்டுகள் பற்றியும் பலியானோர் பற்றியும் எவ்வளவு அக்கறை காட்டின?

வங்கள தேசத்தில் வெள்ளத்தால் பேரழிவும் பிரபல சினிமா நடிகை ஒருவருக்கு குதிக்காலில் கொப்புளமும் ஒரே நேரத்தில் ஏற்பட்டால், நமது ஏடுகளது அக்கறை எது பற்றியது என்று நமக்குத் தெரியாதா, என்ன.

## சண்டியர்களும் சங்கத் தலைமையும்

இரத்தினபுரியில் இனவிரோதச் சக்திகளால் தோட்டத் தொழிலாளர்கட்கு எதிரான வன்முறை கட்டவிழ்க்கப்பட்டு வீடுகளும் உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. இதற்கொதிராக உறுதியான நடவடிக்கைக்கு அவசியம் ஏற்பட்டுள்ள சூழலில் அற்பத் தொகை பணத்தை நட்ட ஈடாகப் பெற்றுக் கொடுப்பதான வாக்குறுதியுடன் இ.தொ.கா. தலைமை திருப்தி கண்டுள்ளது.

சேதப்படுத்தப்பட்ட வீடுகள் திரும்பவும் கட்டித்தரப்பட வேண்டும்.
இழந்த பொருற்கள் திரும்பவும் வழங்கப்பட வேண்டும்.
குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.
இது குறைந்த பட்சமான நீதி.
இ.தொ.கா. பதவிக்காகப் போராடிய வரலாறு உண்டு.
தொழிலாளர்கட்கான நீதிக்காகப் போராடிய வரலாறு உண்டா?

# வவுனியாவில் "பாணும். பவுணும்"

வவுனியா மாவட்டம் இலங்கையின் ஏனைய மாவட்டங்களைப் பொறுத்த வரையில் ஓர் வித்தியாசமான நடைமுறைப் போக்கை கொண்டு இயங்குகின்றது. அரசாங்கத்தினுடைய ஆட்சியமைப்பு ஒரு புறமும், தனிநபர்களது கூட்டாட்சி அமைப்புக்களின் ஆட்சி மறுபுறமும் மக்களை சுமையாக அழுத்த அழுத்த அவர்கள் மனித மாடுகளாக ஊர்ந்து கொண்டிருக்கின்ற காலகட்டம் இது. அவர்கள் அனுபவித்து வருகின்ற அசௌகரியங்களிற்கு ஊடாக பாதுகாப்பு கெடுபிடிகளும் அதி தீவிரப்பட்டுள்ளது. வவுனியாவானது 1990ம் ஆண்டிலிருந்து ஓர் வணிக முக்கியத்துவங் கொண்ட மையப்படுத்தப்பட்ட வியாபார தாயகமாக பலமான போக்கு வரத்துக்களையும் வியாபார, வாடிக்கையாளர்களைக் கொண்ட பிரதேசமாக அமைந்துள்ளது.

இதனை அறிந்து கொண்ட முதலாளி வர்க்கத்தினர் சாதாரண பொதுமக்களையும், தொழிலாள, விவசாய வர்க்கத்தினரையும் தமது இலாப இச்சைக்கு சாதகமாக சுரண்ட முற்படுவதனை காணமுடிகின்றது. இதனால் வவுனியா நகர்ப் பகுதியானது மற்ற மாவட்டங்களை விட வித்தியாசமான நடைமுறைகளைக் கொண்டு இயங்குகின்றது. குறிப்பாக நுகர்வோரினால் நுகரப்படுகின்ற பண்டமான பாண் மற்றைய மாவட்டங்களில் அங்கிகரிக்கப்பட்ட நிறுவை 453கிராம் ஆகும். ஆனால் வவுனியா மாவட்டத்தில் மட்டும் ஒரு பாணினது நிறை 400கிராம் ஆக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. பாணின் நிறையை குறைத்தது போல, பாணின் விலையையும் குறைத்து இருக்கலாம் தானே என்ற ஆதங்கமான வினாக்கள் பொது மக்களிடம் இருந்து எழுகின்றன.

இடப்பெயர்வுகள் காரணமாக யாவற்றையும் இழந்து நிர்க்கதியாக வவுனியாவில் தஞ்சம் அடைந்துள்ள மக்கள் தமது ஏழ்மை நிலையில் பாணையே காலை, மாலை உணவாக கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த பாண் தொடர்பான நிறையை 400கிராமாக இருக்கட்டுமென வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக முன்வைக்கப்பட்டதாக சிலர் கூறுகின்றனர். ஆனால் இது தொடர்பான மோசடி வேலைகளை கண்டு பிடிப்பதற்கு அளவைகள், திணைக்கள அதிகாரிகள் முதற் கட்டமாக பாண் நிறை குறைப்பு செய்யப்பட்ட பேக்கறிகள் திடீரென அதிகாலை வேலைகளில் பரிசோதிக்கப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளது. வழக்குகள் அடுத்த வாரங்களில் நடைபெறும் என நம்பப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க தங்கப்பவுண் விற்பனையில் ஈடுபடும் பல சுயநலம் கொண்ட லாப சுரண்டல் தனவந்தர்கள் முதலாளி வேடமிட்டு நகைகளிலும் மோசடி செய்வது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நகைவியாபாரத்தில் 18கரட், 20கரட், 22கரட், நடைமுறையில் உள்ள போதிலும், 22கரட் தங்கமே சிறந்ததாக கொள்ளப்படுகின்றது. இங்குள்ள வியாபாரிகள் 18,20 கரட் தங்கங்களை 22கரட் எனக்கூறி வாடிக்கையாளர் களிற்கு விற்பனை செய்கின்றனர். ஆனால் தங்கத்தின் முகப் பெறுமதிக்கேற்ப விலையில்லாது 22கரட் தங்கத்துக்குரிய முகவிலையையே அறவிடுகின்றனர். இதனால் மக்கள் ஏய்க்கப்படுகின்றனர். வன்னிப் பகுதியிலிருந்து வந்து நகை கொள்வனவு செய்யும் மக்கள் பல பாதுகாப்பு கெடுபிடிகளையும் தாண்டி இங்கே வந்து தாம் ஏமாற்றப்பட்டு போவதை அறியாது சென்று மீண்டும் பவுணை மாற்றி தரும்படி முதலாளிகளை உலுக்கி எடுக்கின்றனர் இவ் அசௌகரியங்களை இவர்களிற்குள் ஏன் திணிக்க வேண்டும்?

இப்படி ஏமாற்றப்பட்ட மக்கள் பலர் தமது கருத்துக்களை மனுக்களாக அரசமட்ட உயர் அதிகாரிகள் மட்டத்தில் முறையீடு செய்துள்ளனர். இதனைக் கருத்தில் கொண்ட அதிகாரிகள் இத்தங்க மோசடி தொடர்பான விடயங்களை உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு சிலர் கொண்டுவந்துள்ளனர்.

பாணிலும் பவுணிலும் மட்டுமின்றி சகலவற்றிலும் நுகர்வோர் மிக மோசமாகச் சுரண்டப் பட்டு வருகின்றனர். மரத்தால் விழுந்தவனை மாடேறிமிதித்தது போல் தான் வவுனியாவின் மக்களது நிலை.

**வவுனியா தேசாபிமானி**

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI | පුදියපූමි

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட்,
கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## வர்த்தக சமூகமும் அரசியல் தீர்வும்

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அரசாங்கமும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கமும் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம் என்றே ஏறக்குறைய எல்லோரும் கதைக்கின்றனர். வர்த்தக சமூகம் அல்லது இலங்கையில் தொழிலதிபர்களின் சமூகம் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட பல தாராள பொருளாதார விடயங்களிலும் அரசாங்க கட்சிக்கும், எதிர்கட்சிக்கும் பொது இணக்கத்தை கொண்டு வருவதற்கான அரசியல் கட்சிகளின் மாநாட்டை கூட்டியதும், ஜனாதிபதியுடனும் எதிர்கட்சித் தல்லைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதும் இன்றைய முக்கிய விடயங்களாகியுள்ளன.

இலங்கையில் சமூக, அரசியல். சமூக பொருளாதார பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. யுத்தம், தனியார்மயம், தாராளமயம், உழைப்பை தாராளமயப்படுத்தல், என்பவற்றுடன் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி உலக வர்த்தக நிறுவனம் என்பவற்றின் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப் படும் உலகமயமாதல் என்பவற்றினதும் விளைவாகவே அப்பிரச்சினைகள் என்றுமில்லாத வாறு அதிகரித்துள்ளன. இவை இலங்கையின் தொழிலதிபர்களின் சமூகத்தையும் வீட்டு வைக்காது தானே.

இந்த தொழிலதிபர்களுக்கு எஜமானர்களாக விளங்கும் பல்தேசிய கம்பனிகள், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக நிறுவனம், அவற்றுக்கு தலைமை தாங்கும் ஏகாதிபத்தியம் என்பவற்றின் நிர்ப்பந்தங்களும் தேசிய இனப்பிரச்சினையில் அவர்களின் மௌனத்தை கலைத்துள்ளன என்பது வெளிப்படை. அவர்கள் பேரினவாதத்தை சாடுகிறார்கள். யுத்தத்தை எதிர்ப்பதாகவும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். இது பேரினவாதத்துக்கு விழும் அடிகள் என்ற வகையில் வரவேற்கத்தக்கன.

இந்தவகையான முயற்சிகளால் நியாயமான நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டுவிடும் என்ற மாயையில் ஆழ்ந்துவிடத் தேவையில்லை. பேச்சுவார்த்தைகள் போராட்டத்தை மலினப்படுத்தி விடும் என்று சிந்திப்பதும் அடிப்படையில்லாத சிந்தனையாகவே இருக்கும். குறுகிய கால அட்டவனையுடன் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். இனப்பிரச்சினையில் நிலவும் ஆயுத முரண்பாட்டை முற்றாக முடிவுக்கு கொண்டுவருவது பற்றிய கேள்வி எழுவதற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசியல் அமைப்பில் உறுதிசெய்வது பற்றி பேசவேண்டும். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை சமத்துவம் சுயாட்சி என்பன பேச்சுவார்த்தைக்கான அடிப்படை கொள்கைகளாக அமைய வேண்டும். அப்போது தான் பேச்சுவார்த்தை வெற்றியடையவும் அரசியல் தீர்வு காணப்படவும் முடியும்.

ஆனால் தொழிலதிபர்களின் முயற்சிகளுக்கு பின்னால் இலங்கையின் அரசியலை அவர்களின் பூரண கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்கமும், இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பதாக காட்டிக்கொண்டு இந்நாட்டின் தொழிலாளர்களின் விவசாயிகளின் உரிமைகளை மறுத்து அவர்களின் வர்க்க நலனை பாதுகாக்கும் பொருளாதார திட்டங்களை வகுத்துக்கொள்ளும் நோக்கமும், இருப்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இலங்கையில் ஏகாதிபத்திய தலையீட்டிற்கான வெளிப்படையான பாதையை வெட்டிக்கொடுக்கும் ஆபத்தும் தொழிலதிபர்களின் முயற்சிகளுக்கு பின்னால் இருக்கிறது என்பதையும் மறந்து வீடமுடியாது.

இவற்றை விளங்கிக்கொண்டு இனப்பிச்சினையை தீர்ப்பதற்காக தொழிலதிபர்கள் எடுக்கும் முயற்சிகளை அணுக வெண்டியிருக்கிறது. பேச்சுவார்த்தை என்றாலும், அரசியல்தீர்வு என்றாலும் பேரினவாதிகளுக்கு கசப்பானவை. அவற்றை தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களுக்கு பலம் சேர்ப்பனவாக மாற்றுவதே போராடும் சக்திகளின் பொறுப்பாக இருக்க முடியும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கானதும் ஜனநாயகத்துக் கானதுமான போராட்டங்கள் தொடர்ச்சியான படிமுறைகளை கொண்டன என்பதை மறந்துவிடத் தேவையில்லை.

யார் பேச்சுவார்த்தைக்கான முன்மொழிவுகளை முன்வைத்தாலும் அதை வெறுமனே நிராகரித்து அடம் பிடித்து நிற்க அவசியம் இல்லை. அதேவேளை எத்தகைய பேச்சுவார்த்தையிலும் இரண்டு முக்கிய அம்சங்களை கவனத்திற்கு எடுப்பது அவசியம். ஒன்று கடந்த காலத்தின் பட்டறிவும் அதனுடாக எழுந்த அனுபவங்களும். இரண்டாவது தமிழ் மக்களின் அடிப்படையான உரிமைகளுக்கு உரிய உத்தரவாதமும் அத்துடன் முஸ்லீம், மலையக மக்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கிய தீர்வு அம்சங்களுமாகும். இவற்றை வர்த்தக சமூகம் எடுத்துள்ள முயற்சி, எவ்வளவிற்கு நிறைவுடையதாக்கி முன்னெடுத்துச் செல்லும் என்பதைப் பெறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

ஆசிரியர் குழு

## மலையக மக்கள் ஒரு தேசிய இனம் இதனை மறுப்பது மடமை அல்லது ஏமாந்று!

வெகுஜனன்

மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்று கூறியதும் சிலருக்கு அதனைச் உள்வாங்கிக் கொள்ள இயலவில்லை. அவ்வாறு தேசிய இனம் என்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் இரு வகையினர். முதல் வகையைச் சேர்ந்தவர்கள் மலையக மக்கள் மத்தியில் காணப்படுகின்றனர். இரண்டாம் வகையினர் மலையக மக்களுக்கு அப்பாலான தமிழ்த் தேசியவாதிகளிடையே உள்ளனர்.

முதல் வகையினரின் மேலெழுந்தவாரி யான தர்க்கம் வினோதம் கொண்டவையாகக் காணப் படுகின்றது. மலையக மக்கள் இந்திய வம்சாவழி அடையாளம் கொண்டவர்கள். அவர்களுக்கென் சொந்தப் பிரதேசமோ பொருளாதாரமோ அற்ற நிலையில் கலாச்சாரமும் அவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தபோதிலும் அவர்களுக்குரிய நிலம் வென்றெடுத்து நிலை நிறுத்தப்பட வேண்டியதாகும். நிலம் கிடைக்கும் போது தமக்குரிய பொருளாதாரத்தை அவர்கள் நிறைவு செய்வர். நம்மவர்களது இத்தனை கால வாழ்வும் முடிவும் அந்த மண்ணிலே தான் நடந்தேறி வந்துள்ளது. எதிர்காலத்திலும் அதே மண்ணில் தான் நிலைத்து நிற்க வேண்டியும் உள்ளது. அவர்களுக்கு இந்தியாவோ வடக்கு கிழக்கோ அன்றி வேறிடமோ அறியப்படாத அந்நிய பிரதேசங்களாகும். ஆதலினாலே தான் இலங்கையின் அடிப்படையில் பயணிப்பதாலேயே ஓர் முழுமையான மாற்றம் வரும். இதன் மீது நம்பிக்கை கொள்ளும் ஒரு புதிய நிலை மலையகத்தில் தோன்றி வளர்திசை நோக்கி செல்கிறது. தேசிய இனம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை வளர்ச்சியற்ற வெறும் வரட்டுக் கோட்பாடாக தூக்கி நிறுத்தாது இன்றைய வரலாற்று வளர்ச்சிகளுக்கு ஏற்றவாறு அவற்றை பயன்படுத்தல் வேண்டும். அது பிரிவினை வாதமாகவோ தனித்தமிழ் மலையகமாகவோ இருக்க அவசியம் இல்லை. சிங்கள் மக்கள் மத்தியில் வாழும் அதேவேளை தமது வாழும் தனித்துவமான உரிமைகளை எவருக்கும் விட்டுக் கொடுக்காது சமத்துவமாகப் பெற்று வாழ்வதையே அம் மக்கள்

**தேசிய இனம், சுயநிர்ணய உரிமை என்பனவற்றை வளர்ச்சியற்ற வெறும் வரட்டுக் கோட்பாடாக தூக்கி நிறுத்தாது இன்றைய வரலாற்று வளர்ச்சிகளுக்கு ஏற்றவாறு அவற்றை பயன்படுத்தல் வேண்டும். அது பிரிவினை வாதமாகவோ தனித்தமிழ் மலையகமாகவோ இருக்க அவசியம் இல்லை.**

காணப்படுகின்றனர். அவர்களுக்கு உள்ள வலுவான ஒரே அடையாளம் மொழியும் சில கலாச்சாரக் கூறுகள் மட்டுமே. அத்துடன் சிங்கள் மக்கள் மத்தியில் வாழ்வதினால் தேசிய இனக் கோரிக்கையால் பிரச்சினைகள் வளரும் சூழல் ஏற்பட்டு விடும். உதாரணத்திற்கு வடக்கு கிழக்கு நிலையைப் பாருங்கள். அத்துடன் எண்ணிக்கை ரீதியில் சிறுபான்மையாக இருப்பதினால் நாம் அதீத கோரிக்கைகளை முன்வைத்து பிரச்சினைகளைப் பூதாகரமாக்கக் கூடாது. இவ்வாறு தான் மலையக மக்கள் தேசிய இனம் என்பதை கண்டு மிரளும் மலையக தொழிற் சங்கத் தலைமையினரும், மலையக அரசியல் பேசுவோரும் சில புத்திஜீவிகளும் வாதிட முற்படுகிறார்கள். இத்தகைய அச்சம் சயநலம், தலைமைத்துவ நீடிப்பு, காரணமாக எழுந்ததே மலையக மக்கள் என்பதா? அல்லது இந்திய வம்சாவழியினர் என்றழைப்பதா என்னும் விவாதமும். இந்திய வம்சாவழியினர் என்பதை வலியுறுத்தும் கூற்றுமாகும்.

மலையக மக்கள் என்ற பதம் வரலாற்று வளர்ச்சியால் முகிழ்த்த காலத்தின் தேவையை முன்னெடுத்துச் செல்லும் ஒன்றாகும்.. அதுவே தேசிய இனம் என்னும் வளர்ச்சிப் போக்கினை தோற்றுவித்துள்ள அடிப்படைக் காரணியுமாகும். கொலனித்துவ வாதிகளினால் வஞ்சிக்கப்பட்ட எமது மக்கள் சமூகம் கடந்த 170 வருடங்களாக இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக பல தலைமுறைகளின் ஊடே வாழ்ந்து வருபவர்கள். மொழியும் சனத்தொகையில் 5.5.சதவீத்தையுடைய மலையக மக்கள் வளர்ச்சி யடைந்துள்ள பேரினவாத ஒடுக்குமுறையின் கீழ் தம்மை ஓர் தேசிய இனமாக அடையாளம் காண்கின்றனர். தமது ஆண்டாண்டு கால வரலாற்றில் இலங்கையிலேயே மிக மோசமான பொருளாதாரச் சுரண்டலுக்கும் அரசியல் ஒடுக்கு முறைக்கும் உள்ளான மக்கள் சமூகமான மலையக மக்கள் இன ஒடுக்கு முறைகளுக்கு முகம் கொடுத்தே வருகிறார்கள். தமக்குரிய ஒரு பிரதேசத்தில் தங்களது இன உரிமைகளை உள்ளாக்கிய இருப்பை உறுதி செய்யக் கூடிய வகையில் தகுந்த அரசியல் அமைப்பின் வாயிலாக ஒரு விமோசனம் பெறப்படுவதையே அவர்கள் கோருகிறார்கள். தேசிய இனம் சுயநிர்ணைய உரிமை என்பவற்றை நிலை நிறுத்தி வெகுஜன மார்க்கத்தில் வர்க்கப் போராட்ட வற்புறுத்துகின்றனர். இது சிங்கள எதிர்ப்போ அல்ல என்பதைச் சிங்கள மக்களுக்கும் எடுத்துக் கூறி அவர்களை ஏற்றுக் கொள்ள வைத்தல் வேண்டும். இதனை நேர்மைமிக்க பரந்த அரசியல் பணிமூலம் சாதிக்க முடியும்.



கங்காணி: என்ன ராமசாமி பங்குப் பத்திரத்தை வித்திட்டியாமே.

தொழிலாளி: ஆமாங்க அத வித்து கதிர்காமம் போய்வர கையும் கணக்குமா போச்சு.

அடுத்து மலையக மக்கள் ஒரு தேசிய இனம் அவர்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை தமிழ்த் தேசிய வாதிகளில் பெரும்பாலோர் உள்வாங்க முடியாது திணறுகின்றனர். "நான் கேட்க என்னிடம் சகல தகுதிகளும் உண்டு. ஆனால் நீ கேட்க அதற்குரிய தகுதிகள் உன்னிடம் இல்லை. அத்துடன் நீ என்னுடன் நின்றால் போதும் உனக்கென எதுவும் தேவையில்லை" என்றவாறே இவர்கள் மலையக மக்களின் பிரச்சினைகளை அனுகின்றனர். அதனால் மலையக மக்களை ஒரு தேசிய இனமாகவும் அவர்களுக்குரிய சுயநிர்ணய உரிமையும் ஏற்கத் தயங்குகின்றனர். தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியினர் தான் அவர்கள் என்றும் கூறுகின்றனர். இதனை குறுந்தேசிய வாதத்தினுள் உறைந்து காணப்படும் பெருந் தேசியவாத அகங்காரம் என்றே அடையாளம் காணலாம்.

எனவே பாட்டாளிவர்க்க பார்வையான மாக்சிச லெனினிச நோக்கில் மலையக மக்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அவற்றை எவ்வாறு அடையலாம் என்பதையிட்டும் பரந்த பாட்டாளி வர்க்கப் புரட்சித் தளத்தில் வைத்து நோக்கினாலே சமகால யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக கிராம சேவகர் நியமனம் உண்மையா?

மலையகத்தில் 101 தமிழ் கிராம சேவகர்கள் நியமிக்கப்படவுள்ள அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரிமாதம் நியமனங்கள் வழங்கப்படலாம் என்று பரவலாக பேசிக் கொள்ளப்படுகிறது.

தமிழர்கள் கிராம சேவர்களாக நியமிக்கப்படுவர் என்ற கதை நீண்டகாலமாக இருந்து வருகிறது. தற்போதைய அறிவிப்பும் இன்னொரு கதையாகவே இருந்துவிடலாம் என்ற நம்பிக்கையினால் நிலவுகிறது. அத்தோடு தமிழ் கிராம சேவர்களின் நியமனத்தால் மலையகத்தமிழ் மக்களின் ஈடுபடும் நாளாந்த அரசாங்க நிர்வாக விடயங்களில் சிரமங்கள் குறையலாம். பேரினவாத நிலைப்பாட்டால் தற்போது கிராம சேவர்களால் இயங்கும் சிங்களவர்களில் அதிகமானோர் மலையகத்தமிழ் மக்களுக்காக செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த நிர்வாக விடயங்களைக் கூட செய்வதில்லை. இவர்களுக்கான வதிவிட அத்தாட்சி வழங்குவதில்லை வாக்காளர் இடாப்பில் அவர்களின் பெயர்களை பதிவதுமில்லை. சிங்கள கிராமசேவகர்கள் பேரினவாத யந்திரமாகவே செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் பாரிய அசௌகரியங்களுக்குட்பட்டு வரும் மலையகத் தமிழர்களுக்கு தமிழ் கிராமசேவகர்கள் நியமனத்தை கேட்கும் போது ஆறுதலடைய இடமுண்டு. ஆனால் அந்நிய மனங்களால் மலையக தமிழ் மக்களின் இன உரிமைகள் அனைத்தையும் உறுதிசெய்து விடலாம் என்று அதிகமாக நம்பிக்கைக் கொள்ளத் தேவை இல்லை. ஏனெனில் நாடெங்கும் நடைமுறையில் இருக்கும் பேரினவாத அசர பரிபாலன முறையின் கீழேயே இயங்க வேண்டியிருப்பதால் கட்டுப்படுத்தப் படுவர்களாக புதிதாக நியமனம் பெறவுள்ள தமிழர்களும் சேவை செய்ய வேண்டியிருக்கும். அரசியலமைப்பில் மலையகத் தமிழ் மக்களின் இனஉரிமைகளை உறுதி செய்ய முடியும்.

முழு மலையக மக்களுக்கும் சேவை செய்யக்கூடிய அளவிற்கு 101 பேர் என்ற எண்ணிக்கை போதாது. ஆயிரம் பேர் நியமிக்கப்பட வேண்டும் என்பதே மலையக மக்களின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை ஆகும். எனினும் 101 பேரின் நியமனத்தை ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

ஆனல் 101 பேரின் நியமனம் என்றப் பேச்சு இன்னொரு பம்மாத்தாக இருந்துவிடாது என்று நம்புவதற்கு இடமுண்டு. நியமிக்கப்பட வுள்ளவர்களின் பெயர் பட்டியல்கள் இ.தொ.கா. தலைவர் அமைச்சர் தொண்டமானிடமும் ம.ம.மு. தலைவர் பிரதியமைச்சர் சந்திரசேகரத்திடமும் இருப்பதாக அறியமுடிகிறது. இவ்விடயத்தில் உண்மை 'நிலைமையை அவர்கள் இருவரும் மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.

அத்துடன் மேற்படி நியமனங்களை வைத்து கொண்டு அரசியல் வியாபாரத்தை செய்வதற்கு முயற்சிக்கக் கூடாது. அந்நியமனங்கள் அரசியல் வியாபாரமாக்கப்பட்டால் நேர்மையான சேவை மக்களைப் போய்ச்சேராது. எந்த நோக்கத்திற்காக இந்நியமனங்கள் தேவையாக இருக்கிறதோ அந்நோக்கம் நிறைவேறாது போகும்.

## புதிய பூமி

### சந்தாதாரர்கள் விற்பனையாளர்கள் வாசகர்களுக்கான வேண்டுதல்

உங்கள் சந்தாவைப் புதுப்பியுங்கள்.
விற்பனைப் பணத்தை அனுப்பி வையுங்கள்.
மேலதிக நிதி உதவியினை வழங்குங்கள்.
புதிய பூமி பற்றிய கருத்துக்களை எழுதுங்கள்.
மக்களின் நலன்கட்கும் அரசியல் விழிப்புணர்வுக்குமான ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.
புதிய பூமியின் தொடர்ந்த வரவிற்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | - ரூபா | 150.00 |
| ஆறு மாதங்கள் | - ரூபா | 75.00 |
| தனிப் பிரதி | - ரூபா | 10.00 |
| வெளி நாடுகள் (ஒரு வருடம்) (தபால் செலவு உட்பட) | - 25 அமெரிக்க டொலர் | |

காசுக் கட்டளைகளை புறக்கோட்டை(Pettah) தபால் நிலையத்திற்கும் காசோலைகளை E.Thambiah பெயரிலும் அனுப்பி வைக்கவும்.

புதிய பூமி
S-47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தை கட்டிடத் தொகுதி,
கொழும்பு-11.

# இனவாதத்தை எதிர்த்து அரசியல் வேலைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்

## இரத்தினபுரி ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு

இரத்தினபுரி வேவல்வத்தை உட்பட சில தோட்ட லயங்கள் எரிக்கப் பட்டதற்கும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதற்கும் பொறுப்பான வர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை கைது செய்வதற்கு தடையாக சில ஆளும் கட்சி அரசியல்வாதிகள் இருப்பதாக அறியமுடிகிறது. அவர்களும் குற்றச்செயல்களுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதற்காக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று புதிய-ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா கோரியுள்ளார்.

புதிய-ஜனநாயகக் கட்சி, தேசிய ஜனநாயக இயக்கம் எம்.டி.டி.ஆர். நிறுவனம் என்பன இணைந்து இரத்தினபுரி நகரில் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் உரையாற்றும் போதே மேற்படி கூற்றைத் தெரிவித்தார்.

மலையகத் தமிழ் மக்கள் மீதான இனவாத தாக்குதல்களையும் வன்முறைகளைக் கண்டித்தும், இனவாதத்தை எதிர்த்தும், இனஒற்றுமையை வலியுறுத்தியும் இரத்தினபுரி மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக நடத்தப்பட்ட கலந்துரையாடலில் உரையாற்றிய தேசிய ஜனநாயக இயக்கத்தின் செயலாளர் பற்றிக் பெர்ணாண்டோ மலையக தமிழ் மக்கள் அவர்களுக்கு எதிரான இனவாத தாக்குதல்களுக்கு எதிராக அதி தீவிரப்பாதையில் இறங்குவதை தீர்மானிக்க வேண்டியவர்கள் சிங்கள மக்களே ஆவர். இனவாத தாக்குதல்களை தடுத்து நிறுத்தி இனஒற்றுமையை ஏற்படுத்த சிங்கள மக்களே பாடுபட வேண்டும். இல்லா விட்டால் வடக்கு கிழக்கை விட மலையகத்தில் மோசமான நிலைமை ஏற்படுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் மலையகத் தமிழ் மக்களை நியாயப்படுத்துவதை தவிர எமக்கு வேறெந்த வழியும் இருக்க முடியாது. அனால் அவ்வாறான நிலைமை ஏற்படக்கூடாது. அதற்காக நாம் ஒன்றிணைந்த செயற்படுவோம் என்று குறிப்பிட்டார்.

இடதுசாரி கட்சிகளினதும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட கலந்துரையாடலில் இரத்தினபுரி மாவட்டத்தில் இனவாதத்தை எதிர்த்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டது. இனவாதத்தை எதிர்த்து இனஒற்றுமையை வலியுறுத்தி அரசியல் ரீதியாக வேலைகளை முன்னெடுக்க ஒரு குழுவும், கலாசார ரீதியான வேலைகளை முன்னெடுக்க ஒரு குழுவும், பொதுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஒரு குழுவுமென மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டன. இதனடிப்படையில் ஒரு மாதகாலத்துக்கான வேலைகள் தீர்மானிக்கப்பட்டன. இனவாதத்து க்கான தாக்குதல்களுக்குட்பட்ட தோட்டங்களிலும் அவற்றை சூழவுள்ள கிராமங்களிலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பகிரங்க கருத்தரங்குகளை நடத்து வதென தீர்மானிக்கப்பட்டது.

இனவாதத் தாக்குதல்களை கண்டித்தும், இனவொற்றுமையை வலியுறுத்தியும் எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதி வீதி நாடகங்கள் பொம்மலாட்டங்கள், புகைப்படக் கண்காட்சி என்பவற்றுடன் முழுநாள் நிகழ்ச்சிகளை இரத்தினபுரி நகரில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. பிப.3 மணிக்கு நகரசபை மண்டபத்தில் பகிரங்க கருத்தரங்கும் நடைபெறும். அதில் புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர், இ.தம்பையா, தேசிய ஜனநாயக இயக்க செயலாளர் பற்றிக் பெர்ணாண்டோ, புதிய இடதுசாரி முன்னணியின் செயலாளரும், நவசமசமாஜக் கட்சியின் அமைப்பாளருமான லீனஸ் ஜயதிலக்க, ஜனநாயக பொதுஜன இயக்கத்தின் அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

இந்நடவடிக்கைகளை வெற்றிகரமாக செய்வதற்கென தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புகளை பெற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க பாதிக்கப்பட்ட தொட்டத்தொழிலாளர் குடும்ப மொன்றுக்கு 9ஆயிரம் ரூபாவை அரசாங்கம் வழங்கி வருவதாக தெரிகிறது. அதனை கொண்டு அவர்கள் தமது வீடுகளை மீளக்கட்டிக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுவதாகவும் அறிய முடிகிறது.

பசறை குருப்பில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் வன்செயலில் ஈடுபட்டிருந்ததாகக் கூறி தொழிலாளர்களில் 25 பேர் வரை பொலிசாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர். ஆனால் இரத்தினபுரி இனவன் செயல்களுக்கு பொறுப்பானவர்களில் ஒருவரை யாவது பொலிசார் இன்னும் கைதுசெய்யவில்லை. இதிலிருந்து சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் நிலவுகின்ற பாரபட்சமான நடவடிக்கைகளை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் இனவன்செயல்கள் பற்றி இரத்தினபுரி பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மிகவும் கேலிக்குரியன. கொல்லப்பட்ட இரண்டு சிங்களவர்களின் குடும்பங்களுக்கும், வீடு உடைக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட சிங்களக் குடும்பமொன்றுக்குப் நிவாரணங்களை வழங்க பிரதேச சபையினூடாக நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நடை பெற்றவை இனவன்முறை அல்ல வென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் தோட்டத்தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபட்டதாக கூறப்படுவது மட்டுமின்றி அவர்களே முன்னின்று மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் அறிய முடிகிறது.

பேரினவாத அமைப்புகளான பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி போன்றவற்றுடன் போட்டிபோட்டுக்கொண்டு அரசாங்க நிறுவனங்களும் மலையக மக்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இனவாதத்துக்கு எதிரான இயக்கங்கள் அகரவேகத்தில் செயற்பட்டாலின்றி அவற்றை முறியடிக்கவும் முடியாது. இந்நாட்டில் இனவொற்றுமையை ஏற்படுத்தவும் முடியாது.





இரத்தினபுரியில் தோட்டத் தொழிலாளர் மீது நடாத்தப்பட்ட இனவெறியாட்டத்தில் தீக்கரையாக்கப்பட்ட லயன்களைக் காணலாம். பாதிக்கப்பட்ட வேவல்வத்தை தொழிலாளர்கள் மத்தியில் புதிய ஜனநாயக கட்சி, தேசிய ஜனநாயக இயக்கம், ஆசிரியர் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள் சென்று ஆறுதல் கூறி முடிந்த உதவிகளையும் செய்தனர். படத்தில் தோழர் இ.தம்பையா, பற்றிக் பெர்னாண்டோ, போலியர் குணவர்த்தனா, பாடகர் ஜயதிலக பண்டார ஆகியோர் தொழிலாளர் மத்தியில் காணப்படுகின்றனர்.


நன்றி - நூலகத்திட்டம்



# யுத்த எதிர்ப்பு சத்தியாக்கிரகம்

# குருநாகலில் மக்கள் எழுச்சி

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வளர்ச்சி அடைய வைக்கப்பட்ட யுத்தம் இன்று உச்ச நிலையை அடைந்து நிற்கிறது. இந்த யுத்தம் தமிழ் மக்களை சின்னாபின்னப்படுத்தி வருவதுடன் பாரிய உயிர் உடமை அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது. இதுவரை எழுபதினாயிரம் தமிழ்



மக்கள்–போராளிகள் என்போரின் உயிர்களைக் குடித்துள்ளது. முற்பதினாயிரம் பேர்வரை காயங்கள் அடைந்துள்ளனர். ஆறு லட்சம் பேர்வரை அந்நிய நாடுகளுக்கு அகதிகளாக வெளியேறியுள்ளனர். உள்நாட்டில் நான்கு லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர். சுமார் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டும் சேதமடைந்தும் உள்ளன. முப்பதினாயிரம் சிறுவர்கள் அநாதைகளாகித் தவிக்கின்றனர். விதவைகளாகிய இளம் பெண்களின் எண்ணிக்கை இருபதனாயிரம் என அறியப்படுகிறது. பல ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான அசையும் அசையாச் சொத்துக்களும் விளை நிலங்களும் அழிந்தும் பாழடைந்தும் உள்ளன. அன்றாட சமூக வாழ்வும் கல்வி சுகாதாரம் இன்னும் பிற துறைகளும் வடக்கு கிழக்கில் சீர்குலைந்து கெட்டழிந்து கொண்ட நிலையில் காணப்படுகின்றன. மக்களிடையே விரக்தியும் வாழ்க்கை மீதான வெறுப்பும் மேலோங்கி தற்கொலைகள் இடம் பெற்று வருவதுடன் உளவியல் பாதிப்புகளும் மனநோயாளர்களாகி விட்ட சமூக நலக்கேடும் காணப்படுகின்றன.

கடுமையான உடல் உழைப்புக்கும் கல்வி நாட்டத்தின் மூலமான மூளை உழைப்புக்கும் தம்மை உள்ளாக்கி தமக்குரிய பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களுடன் (அவை பழமைவாதத்துடன் கூடியனவாக இருந்த போதிலும்) தமது வாழ்வியலை நடாத்தி வந்த தமிழ் மக்கள் இன்று பாரிய சீர்குலைவுகளுக்கு உள்ளாகி நிற்கின்றனர். அவர்களது எதிர்கால இருப்பே பலத்த கேள்விக் குறியாகி நிற்கின்றது.

இந்த நிலையை பேரினவாத ஒடுக்கு முறையும் அதன் சார்பான யுத்தமுமே ஏற்படுத்தியுள்ளன. தமிழ் மக்களது நியாயமான உரிமைகள் உரிய காலத்தில் உரியவாறு வழங்கப்பட்டிருப்பின் இன்றைய இழிநிலையான யுத்தம் நடக்க அவசியமே இல்லாது போய் இருக்கும். தமிழ் மக்கள் இந்நாட்டில் பிரிந்து தனியே வாழ வேண்டும் என சிந்தித்தது கிடையாது. ஆனால் பிரிந்து தனியே நமது பிரதேசத்தில் நமக்கென ஒரு வாழ்வை ஏற்படுத்திக் கொள்வதை விட வேறு வழி இல்லை என்ற மனநிலைக்கு அவர்களைத் தள்ளிச் சென்றவர்கள் இந் நாட்டின் பேரினவாதிகள் தான். சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்பட்ட ஐம்பது ஆண்டுகள் மட்டுமின்றி அதற்கு முன்பிருந்தே தமிழர்களும் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களும் திட்டமிட்ட வகையில் பேரினவாதத்தினால் பலவகையில் புறக்கணிக்கப்பட்டும் பரிக்கப்பட்டும், ஒடுக்க்ப்பட்டும் வந்துள்ளனர். எனவேதான் சிங்கள் மக்கள் இன்றைய யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதியான யுத்தம் என்பதையும் இதனை முன்னெடுப்பதில் எவ்விதமான நியாயப்பாடும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும். இந்த யுத்தம் அநீதியானது என்பதால் இத்தகைய யுத்தத்தை நிறுத்துமாறும் தமிழ் மக்களது நியாயமான உரிமைகளை வழங்குமாறும் சிங்கள மக்கள் வீதியில் இறங்கி ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டும்.

இன்றைய யுத்தம் தனியே தமிழ் மக்களுக்கு மட்டும் எதிரான ஒரு யுத்தமல்ல. சிங்கள மக்களுக்கும் முழு நாட்டிற்கும் எதிரான யுத்தமாகும். கடந்த பதினைந்து வருடகால யுத்தத்தில் ஏறத்தாள இருபதினாயிரம் வரையான சிங்கள் இளைஞர்கள் இராணுவத்தின் ஊடாக இறந்து போய்விட்டனர். அவர்கள் சாதாரண கிராமப்புற விவசாயிகள் தொழிலாளர்களின் பிள்ளைகளாவர். இவர்கள் நாட்டிற்காக தியாகம் செய்தார்கள் என்றே பிரசாரப் படுத்தப்படுகிறது. உண்மையில் தமது வறுமையைப் போக்கும் வகையிலேயே



இராணுவத்தில் இனைந்தனர் என்பதே உண்மையானதாகும். இன்று எத்தனை சிங்களப் பெற்றாரும் மனைவிமாரும். குழந்தைகளும் கண்ணீர் வாழ்க்கை வாழுகின்றனர். அங்கவீனர்களான இளைஞர்கள் வாழ்க்கையை இருள் மயமான தாகவே எதிர்நோக்கி உள்ளனர். ராணுவ விஸ்தரிப்பும் கட்டாய ஆள்சேர்ப்பும் பின்பு ராணுவத்தை விட்டு வெளியேறி மறைந்து வாழ்வதும் பல சமூகவிரோத சக்திகளை உருவாக்க இவ்யுத்தம் வழிவகுத்துள்ளது. இன்று தாராள கொலை கொள்ளை பாலியல் வல்லுறவு தற்கொலை போன்றவை பெருகி நிற்க ராணுவத்தை விட்டு ஓடிவந்தோரில் ஒரு பகுதியினர் காரணமாகியுள்ளனர். புதிய புதிய பாதாள உலகக் குழுக்கள் தோன்றி நவீன ஆயுதங்களுடன் நினைத்தவற்றை செய்து வரும் நிலை தாராளமாகக் காணப்படுகின்றது. இவற்றுக்கு நீடித்த யுத்தமே காரணமாகி உள்ளது.

அதேவேளை இந்த நீடித்த யுத்தத்தால் அரசியல் அதிகாரத்தை சுவைத்த சகலரும், அரசாங்க உயர் அதிகாரிகளும், இராணுவ மற்றும் ஆயுதப்படைகளின் உயர்நிலை அதிகாரிகளும் பொலிஸ் உயர் பதவி வகித்தோரும் மிகப் பெரும் பணக்காரராகியுள்ளனர். ஆயுதக் கொள்வனவிலும் ஏனைய யுத்தச் செலவீனங்களிலும் கொழுத்த கொமிசன் பெற்று தம்மை வளப்படுத்திக் கொண்டுள்ளனர். இன்று வடக்கு கிழக்கிலும் தலை நகர் கொழும்பிலும் யுத்தம் காரணமான நிர்வாக விடயங்களில் அவற்றை ஒட்டிய சகலவற்றிலும் சிறிய அளவு தொட்டு பாரிய அளவு வரையான லஞ்ச ஊழல் தாராள இடத்தைப் பிடித்துள்ளன. அவை சர்வசாதாரணமாக நாளாந்தம் இடம் பெறும் காரியங்களாகி விட்டன இத்தகையவர்களுக்கு யுத்தம் நிறுத்தப்படுவது பெருகி வரும் நீரூற்றை அடைப்பது போலாகி விடும் என்பதாலேயே பல்வேறு போலிக் காரணங்கள் கூறி யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது.

அதேவேளை அந்நிய ஆயுத வியாபார சக்திகளுக்கு இலங்கையில் யுத்தம் நடைபெறுவது திருவிழா வியாபாரம் போன்றதாகும். யுத்தம் விரிவடைய விரிவடைய அவர்களுக்கு ஒரே கொண்டாட்டமாகவே உள்ளது. ஆயுத வியாபாரத்தின் மூலம் கோடி கோடியாக நாட்டிலிருந்து கொள்ளையிட்டுச் செல்கிறார்கள். அவர்களுக்கு நாட்டின் உயர் அதிகாரிகள் தரகர்களாக நின்று பெருமளவு தரகுப் பணம் பெற்று இலகுவாகவே தமது பைகளை நிரப்பிக் கொள்கிறார்கள்.

இத்தகைய யுத்த சூழலைப் பாவித்து மறுபுறத்திலே தராளமயம் என்ற பெயரில் தனியார் மயப்படுத்தும் போக்கு விரைவுபடுத்தப்படுகிறது. இந்த தனியார் மயப்படுத்தலுக்கும் யுத்தத்திற்கும் உள்ளார்ந்த இணைப்பும் தொடர்பும் உண்டு. இலங்கை போன்ற நாட்டில் அரசாங்க பொறுத்துறைகளைத் தனியார் மயப்படுத்தும் செயல்முறையானது மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வைக்கும் ஒன்றாகும். ஆனால் யுத்தத்தின் மறைவில் அதனைச் செய்து கொள்வது எந்த ஒரு அரசாங்கத்திற்கும் மிக எளிதான காரியமாகும். அதே போன்று நமது வளங்களை பல்தேசியப் பெருச்சாளிகளான இராட்சதக் கம்பனிகளிடம் கையளிப்பதும் யுத்தத்தின் மறைவில் தாராளமாக நடைபெற்று வருகின்ற ஒரு தொடர் நடவடிக்கையாகவே காணப்படுகிறது.

ஆதலினாலேயே யுத்தத்தை நிறுத்துவதும் நியாயமான அரசியல் தீர்வு காண்பதும் அவசியம் என்பதை நாடு முழுவதும் பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டும். அதன் அடிப்படையில் புதிய ஜனநாயக கட்சி தேசிய ஜனநாயக இயக்கம் தியச அமைப்பு நவசமசமாஜக் கட்சி உள்ளிட்ட இருபத்திரண்டு அமைப்புகள் இணைந்து கடந்த செப்டம்பர் 26ம் திகதி குருநாகலில் ஒரு நாள் சத்தியாக் கிரகமும் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடாத்தின. இரண்டாயிரத்திற்கு அதிகமான மக்கள் கலந்து கொண்ட முழு நாள் யுத்த எதிர்ப்பு நிகழ்ச்சிகளில் சொற்பொழிவுகள் கலந்துரை யாடல்கள் வீதி நாடகம், பொம்ம லாட்டம், இசைப்பாடல்கள் போன்றன மூலம் யுத்த எதிர்ப்பு–தனியார்மய எதிர்ப்புக் கருத்துக்கள முன் வைக்கப்பட்டன. பௌத்த கிறிஸ்தவ இந்து குருமார்கள் கலந்து கொண்டு யுத்த எதிர்ப்பு ஆசீர்வாதம் வழங்கினர்.

# மலையகத்தில் பேரினவாத ஓநாய்கள்

ஓநாய் ஒருபோதும் சிரிப்பதில்லை. ஆனால் பல்லிழிக்கும். அவ்வாறு செய்வதைப் பார்த்து சிலர் ஓநாய் சிரிக்கிறது என அர்த்தம் கூறிக் கொள்வர். இன்று மலையகத்தில் பேரினவாத ஓநாய்கள் பல்லிழிக்க ஆரம்பித்துள்ளன. தேர்தல்கள் வர இருப்பதே அதற்குக் காரணமாகும். ஒரு புறத்தால் ஐக்கிய தேசியக் கட்சியும் மறுபுறத்தால் பொதுசன ஐக்கிய முன்னணியும் மலையக மக்கள் மத்தியில் வாக்குத் தேட ஆரம்பித்து விட்டன. தாங்கள் தாங்கள் மலையகத்திற்கு வழங்க மறுத்தவைகளையும் அவை சார்பாக பேரினவாத நிலை நின்று பேசியவைகளையும் இலகுவில் மறந்து விட்டே வாக்கு வேட்டைக்குப் புறப்பட்டு விட்டனர். மலையகத்தில் உள்ள தத்தமது கையாட்களைப் பிடித்துக் கொண்டு பச்சை நீல நிறங்களுடன் பவனிவர ஆரம்பித்துள்ள இவர்கள் வாக்குறுதிகளை கட்டுக் கட்டாக அள்ளி வழங்குகின்றனர். எங்கேங்கே எவை எவற்றின் மூலம் மக்களை வளைத்துப் பிடிக்கலாம் என்பதிலேயே கவனம் திரும்பி உள்ளது.

வீடு சொந்தமாக்குதல், காணி வழங்குதல், கல்வி வசதி விரிவாக்குதல், கிராமசேவையாளர்களை நியமித்தல், இறப்பு பிறப்பு பதிவாளர் நியமனம், ஆசிரிய நியமனம், மின்சாரம் வழங்கல், மலசலகூடம் அமைத்தல் கோவில்களுக்கு உதவுதல், வீதி நிர்மாணம், பஸ் விடுதல் இப்படி இன்னும் ஏறாளம் வாக்குறுதிகள் நீண்ட காலமாகவே வழங்கப்படுவதும் பின்பு மறுக்கப்படுவதும் வழமையாகி விட்ட விடயமாகும். ஆனால் பதவிக்கு வந்து விட்டால் எந்த அரசாங்கமும் தான் கூறியவற்றை நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. அவ்வவ் அரசாங்கங்களை ஆதரித்து அமைச்சராகி அத்தனை சலுகைகள் கோட்டாக்கள் பெற்ற மலையகப் பாராளுமன்ற பிரதிநிதிகளும் அவற்றை நினைவுபடுத்துவதில்லை. ஏனெனில் பதவி பெற்றதும் மக்களை நினைவு படுத்தாத மயக்கம் அவர்களது தலைகளில் நிரந்தரமாகி விடும். ஆனால் அந்த மயக்கத்திலும் தம்மவர்களுக்கு ஆற்றவேண்டியவற்றை மட்டும் நினைவுபடுத்திக் கொள்வர். சாராய பார் கோட்டா, பதவி உயர்வு, பதவி மாற்றம், பழிவாங்கல், பொலீஸ் செல்வாக்கு பெறல், உத்தியோகக் கோட்டா, வங்கிக் கடன் சிபாரிசு, இப்படி வேறும் வேறும் வழிகளில் சலுகைகள். யாவும் அந்தப் பிரதிநிதிகளின் உற்றார் உறவினர் வேண்டியவர்களுக்கு மட்டுமே. பதவி பெற்ற பின் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு மக்கள் என்றால் கண்ணில் படுவது மேற்கூறிய உற்றார் உறவினர்கள் மட்டுமேயாகும்.

அண்மையில் ஒரு தோட்டத் தொழிலாளி ஒரு மலையக கட்சிக்கார முக்கயஸ்தரை நோக்கி 'ஏன் சார் அரசாங்கத்தை ஆதரிக்கும் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு மக்களோட சேர்ந்து போராடினா நம்ம கட்சி பெரிசா வளர்ந்திடும் தானே' என்று கேட்டிருந்தார். அதற்கு அந்த கட்சிப் பிரமுகர் "ஏயா மண்டேல மூளை இருக்கா, நாம இன்னைக்கு அரசாங்கத்திலை பதவி வகிக்கிறதாலை எத்தனை வாகனம் ஓடுது, எத்தனை டெலிபோன் வேலை செய்யுது, கொழும்பிலை அண்ணனுக்கு எந்த மாதிரி வீடு, காரியாலயத்தை கூட நம்ம தேவைக்கும் பாவிச்சிகிறம், நினைச்சவுடன் பெரிய பெரிய ஆட்களைப் புடிச்சு அலுவல் பாத்துறம், இதெல்லாம் ராஜினாமாச் செய்தா செஞ்சுட முடியுமா? கொஞ்சம் யோசிச்சுப் பேச வேணுமய்யா? சும்மா யாராவது ஒருத்தன் சொல்லுவான் அல்லது பேப்பரில எழுதுவான் அதுக்காக நாம பதவியை விட்டுட முடியுமா? அப்படி விட்டிட்டா மலையக மக்களுக்கு எப்படி சேவை செய்யிறது". இப்படித் தான் அன்று வாக்குறுதி வழங்கி பதவியைப் பிடித்த மலையகப் பிரதிநிதிகள் இன்று நடந்து கொள்கிறார்கள்.

இதனால் தான் மலையகத்தை பலவீனமானதாகக் கருதும் பேரினவாத சக்திகள் ஒருபுறத்தால் ஏமாற்றி வாக்குறுதிகள் வழங்க முற்படுகிறார்கள். மறுபுறத்தால் அச்சுறுத்தி அடிபணிய வைக்கலாம் என நம்புகிறார்கள், ஐக்கிய தேசியக் கட்சி வாக்குறுதிகள் வழங்கி வருகிறது. அவ்வாறே பொதுசன முன்னணியும் செய்வதுடன் நிற்காது இரத்தினபுரி வேவல்வத்த தோட்ட இன வெறியாட்டத்திற்கு பின்னால் இருந்து அச்சுறுத்தி அவர்களை அடிபணியச் செய்ய முயல்கிறது. எவ்வளவு தான் வாக்குறுதிகள் வழங்கினாலும் பேரினவாதிகள் தமது உள்ளார்ந்த திட்டத்துடன் தான் செயல்படுவார்களே தவிர மலைஎக மக்களின் நலன்களுக்காக ஒருபோதும் ஈடுபட மாட்டார்கள் என்பதை மலையக மக்கள் நினைவில் இருத்திக் கொள்வது

(9ம் பக்கம் பார்க்க)

நன்றி - நூலகத்திட்டம்



# புலிகளுடன் பேசுவதும் சாதிருப்பதும்



இலங்கை அரசாங்கம் கடந்த சில ஆண்டுகளாகப் புலிகளுடன் பேசுவது பற்றி நிறையவே பேசி உள்ளது. பிரதான எதிர்க்கட்சியான யூ.என்பியும் அது பற்றி நிறையப் பேசி உள்ளது. பேசுவதா பேசாமலிருப்பதா என்பதைப் பற்றிப் பேசுவதில் செலவழித்த முயற்சியில் ஒரு அற்பப் பகுதி யையாவது உருப்படியான ஒரு தீர்வு ஆலோசனையை முன்வைக்கவோ விடுதலை புலிகளுடன் பேசவோ செலவிட்டிருக்க முடியாதா என்று தான் பலரும் நினைக்கிறார்கள்.

போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடும் வரை பேச்சு வார்த்தைக்கே இடமில்லை என்பது தான் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அடக்கு முறை ஆட்சியாளர்கள் கூறிவந்தது. அல்ஜீரியாவில் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்ததன் மூலம் இஸ்லாமியக் கடும்போக்கு அரசியலை வன்முறைப் பாதைக்குத் திருப்பிய ஆட்சியாளர்கள் கூட அதையே சொல்கிறார்கள். இந்தியாவால் கைப்பற்றப்பட்டு அரை நூற்றாண்டுக் காலமாக அடக்கு முறைக்கு ஆளாகியுள்ள காஷ்மீர மக்கள் விடுதலைப் போராட்டத்தின் தொடர்பாக, இந்திய ஆட்சியாளர்களும் அதையே சொல்லி வருகிறார்கள். வியற்நாமிலும் தன் ஆக்கிரமிப்புக்கு 'ஆளாகிய ஒவ்வொரு மண்ணிலும் அமெரிக்கா அதையே கூறி வந்தது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் அயர்லாந்து தொடர்பாக அதையே கூறி வந்தனர். உண்மையில் நடப்பதென்ன?

மக்களது உரிமைக்கான அமைதியான போராட்டங்கள் ஆட்சியாளர்களால் தவறாகக் கையாளப் படுவதன் விளைவாகவே மக்கள் மத்தியில் இருந்து ஆயுதமேந்திய போராட்டங்கள் எழுகின்றன. போராட்டத்திற்கான நியாயங்களை விட்டு விட்டுப் போராட்டத்தை மட்டுமே கருத்தில் எடுக்கும்போது சுத்தமான ராணுவக் கண்ணோட்டமே மிஞ்சுகிறது. இத்தவறு, போராளி இயக்கங்களிடமும் காணப்படலாம். ஆட்சியாளர் நடுவிலும் காணப்படலாம். இதன் விளைவாக அரசியல் என்பது ஒரு போரை நியாயப்படுத்துகிற வாதப்பிரதிவாதங்களாக முடங்கி விடுகிறது. ஆட்சியாளர்கள் போர் மூலம் பிரச்சனைக்கு முடிவுகாண முடியாது என்பதை என்று உணர்கிறார்களோ அன்று தான் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகட்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. வடஅயர்லாந்தின் ஆயுதப் போராட்டம் முடிவில் பேச்சு வார்த்தைகள் மூலமே முடிவுக்கு வந்தது. ஆயினும் இந்த அவசியமற்ற அழிவு ஏன் முப்பது வருடங்களாக நடக்க அனுமதிக்கப் பட்டது என்ற கேள்வி எழுகிறது. 'பயங்கர வாதிகள்' ஆயுதங்களைக் கீழேபோடும் வரை அவர்களுடன் பேச மாட்டோம் என்று அரசாங்கங்கள் கூறினாலும், திரைமறைவில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. வெளிவெளியாகப் பேச்சு வார்த்தைகள் தொடங்கிய பின்பும் பிரித்தானிய வலது சாரி அரசாங்கம் தனது ஏமாற்று வேலைகளையும் தொடர்ந்தது. எவ்வாறாயினும் பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வு ஒன்று காணப்பட்டது.

பேச்சுவார்த்தைக்கே இடமின்றிப் போரைத் தொடர்ந்த ஆட்சிகள் முடிவில் போரில் தோற்றதைக் கண்டிருக்கிறோம். போரின் சுமையால் ஆட்சி பலவீனப்பட்டு அரசாங்கங்கள் கவிழ்ந்ததைக் கண்டிருக்கிறோம். நியாயமான நிலையான தீர்வுகள் வரும் வரை போராட்டங்கள் ஓய்வதில்லை என்பது வரலாறு மீண்டும் மீண்டும் கூறி வரும் பாடம்.

அதேவேளை, விடுதலைப் போராட்டங்கள் மக்களைச் சார்ந்து நடக்கும் போது தான் வெற்றியை உறுதிப்படுத்துகின்றன. எந்தவொரு இயக்கமும் மக்கள் நலனைப் புறக்கணித்துச் செயற்படும் போது தன்னை மட்டுமின்றிப் போராட்டத்தையும் பலவீனப் படுத்துகிறது. மக்களுக்கும் விடுதலைப் படைக்கும் இடையிலான உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிலும் செயலிலும் விளக்கியவர்களுள் மாஓ சேதுங், ஹோ சிமின் போன்றோர் உன்னதமான வரலாற்று உதாரணங்கள். சிறந்த விடுதலைப் போராளியான சேகுவேராவின் சில பெரிய தவறுகளால் அவரது விடுதலைப் போராட்டம் தோல்வி கண்டதையும் நாம் மறக்கக் கூடாது. போராட்ட வெற்றி தோல்விகளை விட முக்கியமானவை அவை தருகிற வரலாற்றுப் பாடங்களே. இது பற்றியும் ஈழத்தின் ஒடுக்கப்பட்ட தேசிய இனம், இனவிடுதலை, தேசிய விடுதலை என்பன பற்றிய விறைப்பான பார்வைகள் மீளாய்வுசெய்யப்பட வேண்டும். இது தேசிய இனங்களை ஒடுக்குவோருக்கும் பொருந்தும், ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவோருக்கும் பொருந்தும்.

**மக்களது வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கும் இப் போர் போன்ற விஷயத்தைத் தமது அரசியல் சதுரங்க விளையாட்டாகக் கருதுவதைச் சகல தேசியவாதக் கட்சிகளும் உடனேயே நிறுத்த வேண்டும்.**

இன்றைய இலங்கை அரசாங்கம் இதற்கு முந்திய அரசாங்கம் போலவே தேசிய இனப் பிரச்சினையைச் சிங்கள்–பெளத்த ஆதிக்க நோக்கில் மட்டுமே ப்பார்க்கிறது என்ற சந்தேகத்தை வலுப்படுத்தும் முறையிலேயே அதன் நடத்தை இருந்து வருகிறது. இந்த அரசாங்கத்துக்கும் இதற்கு முந்தியவைகட்கும் இருந்த கொள்கை வேறுபாடுகள் எதுவும் யுத்தம் என்ற விடயத்தில் தெரியவே இல்லை என்பதோடு சில இடங்களில் முன்னைய ஆட்சியின் கீழ் இருந்ததை விட மோசமான நடத்தையையும் நாம் காண்கிறோம். ஆயினும் சமாதானம் பற்றியும் தீர்வுப் பொதி பற்றியும் நிறையப் பேசப்படுகிறது.

**போராட்டத்திற்கான நியாயங்களை விட்டுவிட்டுப் போராட்டத்தை மட்டுமே கருத்தில் எடுக்கும் போது சுத்தமான ராணுவக் கண்ணோட்டமே மிஞ்சுகிறது. இத்தவறு, போராளி இயக்கங்களிடமும் காணப்படலாம். ஆட்சியாளர் நடுவிலும் காணப்படலாம்.**

யூ.என்.பி.ஆட்சியின் கீழேயே தேசிய இன ஒடுக்கல் மிகவும் மோசமடைந்தது என்பதை நாம் மறக்கக்கூடாது. பதினேழு வருடங்களாகத் தமிழ் மக்களது மிக அடிப்படையான உரிமைகளையும் பறிப்பதில் மும்முரமாக நின்ற ஒரு ஆட்சியின் போது தென்னிலங்கையில் குறைந்தபட்சம் அரை லட்சம் பேராவது ஆளும் படைகளால் அழிக்கப்பட்டனர் என்பதையும் நாம் மறக்கக்கூடாது. ஆயினும் யூ.என்.பி ஆட்சியின் கோரமான செயல்கள் ஒவ்வொன்றாக அம்பலமான பின்பும் ஏதுமறியாதது போல யூ.என்.பி. தலைமை பாவனை செய்கிறது. தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் அதைக் கண்டுங்காணாதது போல நாடகம் ஆடுகின்றன. அரசாங்கமோ யூ.என்.பி. ஆட்சியின் பொட்டுக் கேடுகளைத் தன் வசதிக்குப் பயன்படுத்துவதற்கு மேலாக அவற்றைத் திருத்தவோ உரிய நடவடிக்கை எடுக்கவோ அதிகம் செய்யவில்லை. வடக்கிலும் கிழக்கிலும் தொடர்கிற போர் பற்றிய முடிவுகள் ஆயுதப்படைகளின் தலைமையில் உள்ளவர்களாலேயே எடுக்கப் படுகின்றன என்பது யதார்த்தமான உண்மை. பேச்சு வார்த்தைகள் என்பவற்றை இந்தப் பின்னணியிலேயே பார்க்கவேண்டி இருக்கிறது.

"போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்ற பிரகடனத்துடன் போர் தொடங்கிய யூ.என்.பி. ஆட்சி திம்பு பேச்சு வார்த்தைகள் தொடக்கம் 1987 இலங்கை–இந்திய உடன்படிக்கை வரையும் அதன் பின்னரும் பேச்சு வார்த்தைகள் சர்வகட்சி கலந்தாலோசனைகள் என்பன வெறும் இழுத்தடிப்பு உத்திகளாகவே இருந்து வந்தன, சனாதிபதி பிரேமதாசவின் கொலையை அடுத்து ஆட்சிக்கு வந்த விஜேதுங்க, யூ.என்பியின் பேரினவாத நிலைப்பாட்டையும் போர்க் கொள்ளைகையையும் தயக்கமோ கூச்சமோ இல்லாது பிரகடனம் செய்தார். இது தான் உண்மையான யூ.என்.பி. அரசியல்.

யூ.என்.பி. உண்மையாக வழங்க விரும்பாத தேசிய இனஉரிமைகளில் எதையுமே வழங்காமல் போரைத் தொடர வசதியாகவே மற்றப் பேரினவாதத் தேசிய முதலாளியக் கட்சியான ஸ்ரீ.ல.சு.கட்சியும் சோஷலிஸத்துடனும் புரட்சியுடனும் பேரினவாத அரசியலைக் கலந்து வழங்கிய ஜே.வி.பியும் தமது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை எடுத்து வந்தன.

ஆட்சியிலிருந்து யூ.என்.பி. போன பிறகு, பொதுசன முன்னனி ஆட்சிக்கு வந்து விடுதலைப் புலிகளுடன் போச்சுவார்த்தைகள் என்று எடுத்த சில நடவடிக்கைகள் பற்றிப் பலர்மனதில் நம்பிக்கைகள் இருந்தன. ஆயினும் தேசிய இனப் பிரச்சினைக்கு நிலையான நியாயமான தீர்வுக்கான அடிப்படை வேலைத் திட்டம் என எதுவும் இல்லாமலேயே இந்த அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் என்ற பேரில் தமிழ் மக்கள மத்தியில் தன்து செல்வாக்கை விரிவுபடுத்த முயன்றது என்பது விரைவிலேயே தெளிவாகி விட்டது. விடுதலைப் புலிகளுடன் 1995 அளவில் அதன் பேச்சு வார்தைகள் பசப்பானவை என்பது யாவரும் அறிந்த விடயம்.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களது அடிப்படையான தேசிய இன உரிமைகள் தொடர்பாக வழங்க விருப்பதாகச் சந்தேகிக்கப் பட்ட ஒவ்வொன்றையும் மறிப்பதற்கு யூ.என்பி. ஆற்றி வந்த பங்கு பெரிது. அரசாங்கம் எவ்வளவு அந்தரங்க சுத்தியுடன் தீர்வுப்பொதியை முன்வைத்தது என்பதில் நமக்கு மிகவும் சந்தேகம் உண்டு. அதே வேளை, அப்பொதியின் மூலம் தமிழ் மக்களது பாரம்பரியம் பிரதேச உரிமை, தமது பலவேறு அலுவல்களைப் பார்க்கும் அதிகாரம் போன்றவற்றை மறுக்கும் விதமாகத் தீர்வுப் பொதியை அர்த்த மற்றதாக்குவதில் யூ.என்.பி. ஆற்றிய பங்கும் பெரியது. போர் நிறுத்தம் தொடர்பாக ஜே.வி.பி. காட்டி வரும் தயக்கமும் சுயநிர்ணயத்திற்கு அதன் மூர்க்கத்தனமான எதிர்ப்பும் படுபிற்போக்கான சிங்களப் பேரினவாதிகளின் நிலைப்பாட்டை விட மோசமாகவே இருந்து வந்துள்ளது.

இப்படியான பின்னனியிலேயே விடுதலைப் புலிகளுடன் பேசுவதும் பேசாதிருப்பதும் பற்றிய அண்மைக்கால அரசியல் நாடகங்களை நோக்க வேண்டி இருக்கிறது. அந்நிய மூலதனம் இந்த நாட்டில் தனது சுரண்டலை விருத்தி செய்யவும் தென்னாசியச் சுழலில் தனது சந்தைப் பொருளாதார நலன்களைப் பேணவும் தனக்கு உடன்பாடான ஒரு ஸ்திரமான ஆட்சி இந்த நாட்டில் இருப்பதை விரும்புகிறது. போர் உபகரண விற்பனை மூலம் கிடைக்கும் இலாபத்தை மேலை முதலாளியத்தின் ஒரு பகுதியினர் விரும்பினாலும் இப் போரின் தொடர்ச்சியால் அயல் முதலீடுகளும் அவற்றின் மூலமான சுரண்டலும் பாதிக்கப்படுகின்றன. அதே வேளை, தனியார் மயமாக்கல் மூலம் சூறையாடிவரும் செல்வங்களை எதிர்காலத்தில் தனக்கு உத்தரவாதம் செய்ய இயலாத நிலை இப்போரினால் நிகழக்கூடிய அரசியல் மாற்றங்களால் ஏற்படும் எனவும் அந்நிய மூலதனம் அஞ்சுகிறது. அந்த அளவில் தனது தரகு முயற்சியின் மூலம் ஏற்படும் ஒரு சமாதானம் அதற்கு ஏற்புடையது.

புறநெருக்குவாரங்களால் அரசாங்கமும் யூ.என்.பியும் சமாதான வேடம் பூணும் தேவை ஒரு புறமிருக்க, நாட்டின் பொருளாதாரம் இப் போராற் பாதிக்கப் பட்டுச் சீரழிகிறது. இதன் விளைவாகத் தென்னிலங்கை ம்க்கள் ம்னதில் கசப்பு அதிகமாகி வருகிறது. எனவே போரை முடிவுகட்டும் முயற்சிகளை எடுப்பதாக அரசாங்கம் காட்ட முற்படுகிறது. தீர்வுப்பொதி, போர் மூலம் சமாதானம், பேச்சுவார்த்தைகள் என்ற பேரில் அரசாங்கம் போரை விட வேறெதையுமே செய்யவில்லை. விடுதலைப் புலிகளை சர்வதேச

11ம் பக்கம் பார்க்க

# அக்கினிப் பிரவேசம்

## தந்தையும் மைந்தரும் (10)

சத்தியாக்கிரகத்தின் தோல்வி தமிழரசுக்கட்சியின் இயலாமையைச் சிங்களப் பேரினவாதக் கட்சிகட்கும் தமிழ் மக்களுக்கும் உணர்த்திய பின்பும் காந்திய தருமத்தின் மொழியைத் தனது அரசியல் சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்த அக்கட்சி உபயோகித்தது. 1962ல் சீன–இந்திய தகராறும் போரும் பற்றிய விடயத்தில் எதுவிதமான தயக்கமுமின்றி சீனாவை குற்றவாளி என்று கூறி சீன எதிர்ப்பு ஊர்வலம் போனதன் மூலம் தமிழரசுக்கட்சியும் யூ.என்.பியும் ஒரே அணியில் நின்றன. பொதுவாக இலங்கையின் முக்கியமான பல பிரச்சினைகளில் பிற்போக்கான நிலைப்பாட்டைத் தமிழரசுக்கட்சி எடுத்தாலும் அயல் விவகாரங்களில் அது அதிகம் அக்கறை காட்டியதில்லை. இலங்கை அரசாங்கம் அந்நிய எண்ணெய்க் கம்பனிகளைத் தேசியமயமாக்கியபோது 'இது தருமத்துக்கு விரோதமானது' என்று ஈழத்துக் காந்தியம் பேசிய தமிரழசுத் தலைவருக்கு கியூபா மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் நெருக்கு வாரங்களும் அதருமம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாக தெரியவில்லை. சுதந்திர கொங்கோவின் முதலாவது ஆட்சித் தலைவரான பற்றிஸ் லுமும்பா பிற் போக்குவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட போதும் அதருமம் தென்படவில்லை. இவ்வாறான பம்மாத்துக்களின் பின்னணியிலேயே முன்னொரு போதும் இல்லாதவாறு செல்வநாயகத்தின் 'காந்தி' படிமம் தாக்குதலுக்கு உள்ளானது.

1956 முதல் 1961 வரை, பொதுக் கூட்டங்களில், 'ஈழத்துக் காந்தி வாழ்க' என்று கோஷங்கள் எழுப்பப்பட்ட போது 'என்னைக் காந்தி என்று அழைக்காதீர்கள்' என்று வேண்டுகோள் விடுத்த செல்வநாயகம் உண்மையில் அதைத் தடுக்க வேண்டுமாயிருந்தால் அப்படிக் கோஷம் போட ஏற்பாடு செய்த தனது கட்சியின் தொண்டர் படையிடம் கண்டிப்பாக கட்டளையிட்டிருக்க முடியும். 'காந்தி என்று அழைக்காதீர்கள்' என்ற வேண்டுகோள் மூலம் அவரது காந்திப் படிமம் மேலுமீ வளர்க்கப்பட்டது. ஆனாலும் 1961ன் பின் உள்ளூர்க் காந்தியம் உளுத்துப் போனதோடு ஒரு கேலிப்பொருளுமாகியது. முன்பு கம்யூனிஸ்ட் அனுதாபியாயிருந்து 70களில் தமிழ்த் தேசியவாதியாக மாறிய பத்திரிகையாளரும் திராவிட இயக்கப் பாணி நாத்தீக எழுத்தாளருமான அந்தனிசில் செல்வநாயகத்தை 'கோட்டு சூட்டு காந்தி', 'கோழி புறியாணி காந்தி' என்று மிகவும் கிண்டலாகக் குறிப்பிட்டு எழுதிவந்தார். தமிழரசுக் கட்சி ஈழத்துக் காந்தி என்ற படிமத்தைப் பயன்படுத்துவது படிப்படியாக நின்றுபோக நேர்ந்ததற்கு இவ்வாறான கிண்டல்தான் காரணம் அல்ல. காந்தி, அகிம்சை, சத்தியாக் கிரகம் போன்றவை பற்றிப் பேசுவதன் மூலம் தமிழரசுக்கட்சியினர் மக்களை இனி மேலும் கவரமுடியாது என்ற உண்மை அவர்களுக்கு விளங்கி விட்டது. ஆயினும் செல்வநாயகத்தை ஒரு புனிதராகக் காட்டும் தேவை அவர்கட்குத் தொடர்ந்தும் இருந்து வந்தது. இந்தப் புனிதத்துவம் பரிட்சிக்கப்படும் நாள் வேகமாக நெருங்கி வந்தது.

> **காந்தி, அகிம்சை, சத்தியாக் கிரகம் போன்றவை பற்றிப் பேசுவதன் மூலம் தமிழரசுக்கட்சியினர் மக்களை இனி மேலும் கவரமுடியாது என்ற உண்மை அவர்களுக்கு விளங்கி விட்டது. ஆயினும் செல்வ நாயகத்தை ஒரு புனிதராக காட்டும் தேவை அவர்கட்குத் தொடர்ந்தும் இருந்து வந்தது. இந்தப் புனிதத்துவம் பரீட்சிக்கப்படும் நாள் வேகமாக நெருங்கி வந்தது.**


1963–64, இலங்கையின் இடதுசாரி இயக்கத்திற்குச் சோதனை மிகுந்த காலம் எனலாம். சர்வதேச அரங்கில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான திரிபுவாத அணிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான மாக்ஸிய–லெனினிய அணிக்குமிடையிலான போராட்டம் வெளியான பிளவான ஆண்டு அது. இலங்கை பாராளுமன்ற சீர்திருத்தப் பாதைக்கும் பாட்டாளிவர்க்கப் புரட்சிப் பாதைக்குமான முரண்பாடு காரணமாக 1963ல் கம்யூனிஸ்ட் கட்சி பிளவு பட்டது. 21 கோரிக்கைகளின் அடிப்படையில் சமசமாஜ, கம்யூனிஸ்ட், பிலிப் குணவர்தன தலைமையிலான மஹாஜன எக்சத் பெரமுன (மக்கள் ஐக்கிய முன்னனி) ஆகிய கட்சிகள் ஒன்று பட்டுப் போராட ஆயத்தமான வேளை, ஸ்ரீ.ல.சு.கட்சி அந்த ஒற்றுமையை முறிப்பதில் வெற்றி கண்ட ஆண்டு அதுவே. அதைக் குலைத்து ல.ச.ச.கட்சி அரசாங்கத்தில் இணைந்த சூழலை ஒட்டி அங்கும் பிளவுகள் ஏற்பட்டன. ல.ச.ச.கட்சித் தலைமையின் துரோகமாக இதைக் கருதிய பிலிப் குணவர்தன தனக்கு மூக்குப்போனாலும் சமசமாஜக் கட்சிக்குச் சகுனம் பிழையாக வேண்டும் என்ற விதமான முறையில் அரசியல் சீரழிவுக்கு ஆளாகி, 1965ல் யூ.என்.பி அரசில் இணைவதற்கான திருப்புமுனையும் அதுவே.

லேக்ஹவுஸ் பத்திரிகைகள் ஸ்ரீ.ல.சு. கட்சி அரசாங்கத்திற்கு விரோதமான விஷமப் பிரசாரத்தை நெடுங் காலமாகவே நடத்தி வந்துள்ளன. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக இலங்கை வானொலியை தனது மாற்றுப் பிரசாரக் கருவியாக வெற்றிகரமாகக் கையாண்டார். காலப் போக்கில் வானொலியின் நம்பகத் தன்மை கேள்விக்குறியதாகியது. இந்த நிலையில் லேக்ஹவுஸ் நிறுவனம் நாளேடுகள் மீது செலுத்திய ஆதிக்கம் அரசாங்கத்திற்கு எதிரான பல்வேறு சக்திகளையும் ஊக்குவித்ததோடு யூ.என்.பி.ஆட்சியை மீளக் கொண்டுவரத் தன்னாலான எல்லா வற்றையும் செய்தது. அடுத்த தேர்தலின் போது லேக்ஹவுஸின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் தேவையை ஸ்ரீ.ல.சு.கட்சி உணர்ந்தது. லேக்ஹவுஸ் ஏடுகட்கு மாற்றான வலிய பத்திரிகைகள் ஸ்ரீ.ல.சு.கட்சியிடம் இருக்கவில்லை. எனவே லேக்ஹவுஸைத் தேசியமயமாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

லேக்ஹவுஸ் பத்திரிகை ஏகபோகம் பலவகைகளிலும் பிற்போக்கானதும் ஏகாதிபத்திய சார்பானதும் என்பதனால் அதைச் தேசியமயமாக்கும் திட்டம் இடதுசாரிகளால் பொதுவாக வரவேற்கப்பட்டது. ஆயினும் 1964ல் அந்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் போது ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் இருந்த வலதுசாரிகப் பிரிவினர் அரசாங்கத்தைத் தோற்கடித்து ஆட்சியை கவிழ்ப்பது என்ற முடிவுக்கு வந்து விட்டனர். வாக்கெடுப்பின் போது யூ.என்.பியும் இவர்களும் தருமத்தின் பேரால் தமிழரசுக் கட்சியும் மட்டுமல்லாது ல.ச.ச.கட்சியிலிருந்த பிரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களித்து அதைத் தோற்கடித்தனர். அரசாங்கம் ஆட்சியை விட்டு விலகித் தேர்தலைச் சந்திக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இச் சூழலில் தமிழரசுக் கட்சி ஆதரவுடன் ஸ்ரீ.ல.சு.க–ல.ச.ச.க ஆட்சியை 1965ல் தேர்தல் நடக்க வேண்டிய காலம்வரை நீடிப்பதற்கான சில முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. செனெற்றர் ஏ.எம்.ஏ.அஸீஸ் தமிழரசுக்கட்சியுடன் இது தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் கூறப்பட்டது. கல்விமானும் நேர்மையாளருமான அஸீஸிடம் தமிழரசுக்கட்சித் தலைமை அரசாங்கத்திற்கு ஆதரவு தரும் என்ற அபிப்பிராயம் ஏற்படுத்தப் பட்டதாகவும் அந்த நம்பிக்கையின் பேரிலேயே ஆட்சிக் கலைப்பை ஸ்ரீ.ல.சு.க. பிற்போட்டதாகவும் அப்போது பேசப்பட்டது. இது பற்றிய உறுதியான தகவல்கள் என்வசமில்லை. எவ்வாறாயினும், ஸ்ரீ.ல.சு.க.–ல.ச.ச.க. ஆட்சி ஒரு நம்பிக்கைத் தீர்மானத்தின் மூலம் தன்னை நிலை நிறுத்த எடுத்த முயற்சி இயலாமல் போகும் நிலையில் ஆட்சி கலைக்கப்பட்டு 1965ல் தேர்தல் நடந்தது.

தேர்தலை நடத்துவதில் ஏற்பட்ட கால தாமதத்தை யூ.என்.பியும் ஏரிக்கரை ஏடுகளும் தமக்கு வசதியாகப் பாவித்தன. ஸ்ரீ.ல.சு.கட்சி தேர்தலைத் தவிர்த்து ராணுவ உதவியுடன் சர்வாதிகாரத்தை நிறுவ முயல்கிறது என்ற விதமான பிரசாரமும் முடுக்கிவிடப்பட்டது. 1962ல் சதிமூலம் ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற ராணுவ அதிகாரிகள் யூ.என்.பிக்கு நெருக்கமானோர். இதன் பின்பு ராணுவத்திலும் அதன் தலைமையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. யூ.என்.பியின் அரசியல் வலிமையின் தளம் ஒன்று இவ்வாறு பதிக்கப்பட்டது. யூ.என்.பியின் குற்றச் சாட்டு முற்றிலும் பொய்யானதே என்றாலும் 1965 தேர்தலில் யூ.என்.பி அற்ப பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வர அதுவும் உதவியது. அது மட்டுமன்றிப், பின்னரும் நிகழ இருந்தது போல, தமிழரசுத் தலைமைக்கும் யூ.என்.பி. தலைமைக்கும் இடையே ஒரு இரகசிய உடன்படிக்கையும் உருவானது. தமிழ் மக்களை யூ.என்.பிக்குச் சார்பாக வாக்களிக்குமாறு இத்தலைமையின் மறைமுகமான தூண்டுதல் அன்று முதல் 1980கள் வரை தொடர்ந்தது.

1956 போலன்றி 1960 தேர்தல்களிலும் 1965 தேர்தலிலும் யூ.என்.பி அணிக்கோ ஸ்ரீ.ல.சு.க. அணிக்கோ ஏகப் பெரும்பான்மை இருக்கவில்லை. இதையிட்டுத், தமிழரசுக் கட்சி இலங்கையை ஆள்வது எந்தக் கட்சி என தீமானிப்பது நாமே என்று அகம்பாவத்துடன் பேசவும் முற்பட்டது. இதுவே சத்தியாக்கிரகத்திற்குப் பின்னான காலத்தின் சாத்வீகப் போராட்ட அரசியலானது. 1970 தேர்தலின் பின்பு "இனிமேல் தமிழர்களைக் கடவுள்



தான் காப்பாற்ற வேண்டும்" என்று செல்வநாயகம் ஏங்கியது அவரது இறுதித் தீர்க்க தரிசனம். தந்தையின் மைந்தர்கள் கடவுள் நினைத்தாலுங் கூடக் காப்பாற்ற முடியாத படி தமிழரசுக் கட்சியின் அரசியலை பூரனமாக பிற்போக்கு அரசியலாக்கி வைத்த கதை 1977ல் தொடங்கியது.

ஜி.ஜி. பொன்னம்பலத்தின் அரசியலை 1950களில் தாங்கள் ஏளனம் செய்தபோது தமிழரசுக் கட்சியனர் அரைமந்திரி பதவி, முழுமந்திரி பதவிகட்காகத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்தோர் என்று பேசியதை 1965ல் மக்கள் மறக்கவில்லை. எனவே யூ.என்.பி. அரசாங்கத்தில் பங்காளிகளாகி மந்திரிப்பதவி பெற்றுத் தமது அரசியற் கோரிக்கைகளை வென்றெடுப்பது எத்தகைய அபிப்பிராயத்தை உருவாக்கும் என்பதைத் தமிழரசுத் தலைவர்கள் அறியாமலில்லை. எனவே யூ.என்.பி. வழங்க உடன்பட்ட அமைச்சர் பதவியைத் தெரிவு செய்யப்பட்ட எவரும் ஏற்பதில்லை என்று முடிவெடுத்து தமிழ் மக்களால் அறியப்படாதவரானபோதும் செல்வநாயகத்திற்கு மிக நெருக்கமான ஒரு பிரபல கொழும்பு வழக்குரைஞர் என்ற மகத்தான தகுதியின் பேரில் மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரானார். இதன் மூலம், தமிழரசுக்கட்சி அமைச்சர் பதவிக்காக அலையும் கட்சியல்ல என்று மக்களை இன்னும் சிலகாலம் ஏமாற்றும் வாய்ப்பும் மந்திரிப் பதவியை யார் பெறுவது என்ற மோதலைத் தவிர்க்கும் வசதியும் கிட்டியது.

இந்தப் புதிய உறவின் பின்பு தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களது நடத்தையில் கூட சில மாற்றங்களை பலரும் அவதானித்தனர். மக்களுடன் ஓரளவு சகஜமாகவே பழகும் பண்புள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் 1956ல் காணப்பட்டனர். 1965ல் பாராளுமன்ற உறுப்பினர்கட்கும் கட்சி ஆதரவாளர்கட்குமிடையே உள்ள விலகல் அதிகமாயிற்று அது மட்டுமல்லாது, முதலாளிகளுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் உள்ள நெருக்கம் 1965க்கு சிறிது முன்பே வெளியாக தெரியத் தொடங்கி விட்டது. குறிப்பாக 1960களின் முற்பகுதியில் தமிழரசுக்கட்சி அனுதாபிகளான அரசாங்க எழுதுவினைஞர்கள் அமைத்த தமிழ் எழுதுவினைஞர் சங்கத்தையொத்த தொழிற்சங்க அமைப்புக்களைத் தமிழ்த் தொழிலாளர் மத்தியில் நிறுவுவதில் தமிழரசுக் கட்சிக்குச் சிரமம் இருந்தது. திருகோணமலைத் துறைமுகத்தில் தமிழரசுக் கட்சி 1961 சத்தியாக்கிரகத் தோல்வியின் பின்பு அமைத்த தொழிற் சங்கத்திற்கு ஒரு கப்பற் கம்பனி முதலாளியின் ஆதரவு இருந்தது. இதே முதலாளி தனது கம்பனியில் தொழிற் சங்கம் அமைவதை மூர்க்கத்தனமாக எதிர்த்தவராவார். ஆயினும் 1965 தேர்தலுக்குப் பின் நடந்த முதலாவது மேதினத்தில் ஒரு முதலாளியை மேடையேற்றிய புதுமை யூ.என்.பி கூட அன்று கற்பனை செய்யாத தமிழரசுச் சாதனை.

1962 அளவில் மலையகத்தில் இருந்த பலவேறு தி.மு.க எனப்படும் சில்லறைக் குழுக்களில் ஒன்றுடன் சேர்ந்து தமிழரசுக் கட்சி தொழிற்சங்கம் தொடங்க முற்பட்டது. இது தொண்டமானுக்கு எதிராக தமிழ்ப் பேசும் இன ஐக்கியத்தைக் காக்கும் முயற்சியாகவே காணப்பட்டது. தோட்ட முதலாளி தொண்டமான் மலையக மக்களை ஏமாற்றி அரசியல் நடத்த அவருக்கு ஒரு மலையகத்து அரசியற் பின்னனி இருந்தது. தோட்ட முதலாளி செல்வநாயகத்தை மலையக மக்கள் நம்பி ஏமாற ஒரு அடிப்படையும் இருக்கவில்லை. தமிழரசுத் தலைமை விரைவிலேயே தன் பாடத்தை கற்றுவிட்டது. எனவே 1965ல் ஏற்பட்ட ஏழு கட்சிக் கூட்டரசாங்கத்தில் யூ.என்.பி மட்டுமன்றி பிலிப் குணவர்தனவின் ம.ஐ முன்னணியும், தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இ.தொ.கா. ஆகியனவும் பச்சை இனவாதிகளான கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜி.சேனநாயக ஆகியோரும் இருந்தனர். இவர்களை விட யூ.என்.பிக்குள்ளும் தீவிரமான சிங்கள இனவாதிகள் இருந்தனர். 1965–70களில் டட்லி சேனநாயக தலைமையிலான ஆட்சியின் போது ஜே.ஆர்.ஜயவர்த்தன தனது இனவாதத்தைச் சிறிது அடக்கியே வாசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1965ல் யூ.என்.பி அரசாங்கத்திற் பங்காளிகளாகச் சேர்ந்ததன் மூலம் தமிழரசுக் கட்சி தனது முன்னைய அடையாளத்தின் சில முற்போக்கான அடையாளங்களை அப்பட்டமாகவே அழித்துக் கொண்டது. அது மட்டுமன்றி, 1964ல் ஸ்ரீ.ல.சு. கட்சியுடனான பேரத்தின் போது அது ஸ்ரீ.ல.சு.கட்சித் தலைமைக்குச் கொடுத்த நம்பிக்கையையும் பின்பு யூ.என்.பித் தலைமையுடன் செய்து கொண்ட இரகசிய உடன் படிக்கையும் ஸ்ரீ.ல.சு.கட்சி எவ்வாறு நோக்கும் என்பது பற்றிய கணிப்பில் தமிழரசுக் கட்சி பெரும் தவறிழைத்தது. யூ.என்.பியுடனான இக் கூட்டு, தமிழ்க் காங்கிரஸ் போல தமிழரசுக் கட்சியும் ஒரு தமிழ் யூ.என்.பி. என்ற படிமம் இதன் மூலம் உறுதியானது. இது தோற்றப் பாட்டிலான மாற்றம் என்றில்லாமல் சாராம்சத்திலேயே யூ.என்.பியுடன் தமிழரசுத் தலைமை கண்டுகொண்ட ஒரு புதிய அடையாள ஒற்றுமை என்பதை வலியுறுத்தும் விதமாகவே 1965–70 கால இடைவெளியில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பெரும்பாலோர் நடந்து கொண்டனர். இது பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

நன்றி - நூலகத்திட்டம்



# சமூக மீட்சிக்கு பங்களிக்க வேண்டும்!

## தந்தை மகளுக்கு எழுதிய கடிதம்

அன்புமிக்க மகளுக்கு

உங்கள் அம்மாவின் கடிதத்தையும் உனது கடிதங்களையும் படித்து வந்தேன். உனது கடிதம் ஒன்றில் இருந்த ஒரு வசனம் எனது கவனத்தை ஈர்த்தது. அது "...மீட்கப்படாத வீணையாக வாழ்வேன்" என முடிகின்றது.

உங்கள் பிரச்சினையை, அதற்குள்ள சமூகத் தொடர்பை புரிந்து கொள்ள, சில தகவல்களை, கருத்துக்களை தெரிவிப்பதே எனது இந்தக் கடிதத்தின் நோக்கம்.

எனது இளம் பிராயந் தொட்டு சமூகப் பிரச்சினை பற்றியும் அதற்கான தீர்வுபற்றியும் அக்கறை கொண்டிருந்தேன். சாதிப் பிரச்சனை, சீதனப் பிரச்சினை போன்றவற்றை சமூகப் பிரச்சினையாக இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்காகச் செயற்பட்டு வந்தேன். எனது துணைவியைத் தெரிவு செய்த போது சீதன எதிர்ப்புக் கொள்கையை கடைப்பிடித்தேன்.

எனது உழைப்பு உங்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய செலவிடப்பட்டது. இவற்றை எனது சௌகரியங்களை துறந்து தான் செய்ய வேண்டியிருந்தது. நீங்கள் பிறந்ததுடன் புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டேன். ஆரோக்கிய காரணத்திலும் பார்க்க பொருளாதார காரணமே முதன்மை பெற்றது. உங்கள் எதிர்காலம் கருதி என்னால் பணத்தை ரொக்கமாகச் சேர்க்க முடியவில்லை என்பது உண்மை தான், பிள்ளைகளுக்குகல்வி கற்க அவர்களின் திறமைகளை விருத்தி செய்ய முனைப்பாகச் செயற்பட்டேன். நீங்கள் பிறக்க முன்பு தொடக்கமே எனது மாதாந்தச் செலவில் நல்ல புத்தகங்கள் வாங்கிச் சேகரிக்கத் தொடங்கினேன். அவற்றை நீங்களும் சகோதரங்களும் எவ்வாறு பயன்படுத்தினீர்கள் என்பதை நான் கூறத் தேவையில்லை. நீங்கள் உயர் கல்வி பெற வசதியாக யாழ்ப் பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப் போராடியவர்களுடன் நானும் இணைந்து கொண்டேன். பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் யாழ். பல்கலைக்கழகம் விஸ்தரிக்கப் பட்டது. இன்று உங்களை யாழ். பல்கலைக்கழக பட்டதாரியாகப் பார்க்கும் பொழுது மிகவும் பெருமைப்படுகிறேன்: மகிழ்ச்சி கொள்கிறேன்.

உங்கள் சகோதரர்கள் பட்டதாரிகளாக வர முடியாவிட்டாலும் அவர்கள் தங்கள் காலில் நிற்கக்கூடிய அளவிற்கு விருத்தி அடைந்துள்ளார்கள்.

எனது உற்றார், உறவினர் உங்கள் மகளின் கலியாண விஷயம் எப்படி எனக் கேட்கிறார்கள்? நீங்கள் முயற்சி எடுக்காவிட்டால் சரிவராது என்கிறார்கள்.

நானும் முயற்சி செய்தேன். அவை தோல்வியில் முடிந்தன. ஒவ்வொரு முறையும் சீதனம் எவ்வளவு என்று கேட்க, இல்லை என நான் பதில் சொல்வதுடன் பேச்சு முடிகிறது. எனது இயலாமையை அம்பலப் படுத்துவதை தவிர வேறு ஒன்றும் நடைபெறவில்லை.

இதற்கிடையில் வெளிநாட்டு மாப்பிள்ளைகள் என்றால் எமது நிலைக்குத் தோதாக இருக்கும் என்று எனது மாமா, உனது பேரன் கூறுகிறார். மக்களின் வரிப்பணத்தில் பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலை கழகம் வரை படித்த பின் நாட்டுக்கு வீட்டுக்கும் பயன்படாமல் வெளிநாடு சென்று உழைப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இது உங்களுக்கு மட்டும் உள்ள பிரச்சினை அல்ல உங்களை ஒத்த வயதுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் உள்ள பிரச்சினைதான்.

நீங்கள் சின்னப்பிள்ளைகளாக இருந்த காலத்திலேயே நான் இந்தப் பிரச்சினை பற்றி யோசித்ததுண்டு. நீங்கள் வளர்ந்து திருமண வயதெய்தும் காலத்தில் வேலை வாய்ப்பு பெருகும், சீதன எதிர்ப்பு வலுவடையும், சமூக மாற்றம் சாதகமாக மாறும் என அன்றைய தேசிய, சர்வதேச நிலையைத் தழுவியதாக இருந்தது.

அன்று அணி சேரா நாடுகள் ஸ்தாபன ரீதியாக வலுயுள்ளனவாக இருந்தன. பல அரசியல் பொருளாதார நடவடிக்கைகள் ஜனநாயக மயமாகிக் கொண்டிருந்தன. அந்த மாற்ற வேகம் இருபத்தைந்து ஆண்டுகளில் பெருமளவில் சமூக நீதியைத் தோற்றுவிக்கும் என்ற ஊகத்தை ஏற்படுத்தியது. ஆனால் இன்று நடப்பவை எதிர்மாறாக யுள்ளனவே.

அணி சேரா நாடுகள் இப்போது வலு இழந்துள்ளன. உலகின் பல நாடுகளிலும் யுத்தங்கள் நடைபெறுகின்றன. எல்லா இனத்தவர்களுக்கும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

> **யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் நாளிதழில் 'மடல் மோதல்' என்னும் பகுதியில் தாய்க்கும் மகளுக்குமிடையில் இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்களை வாசித்த ஒரு தந்தை மகளுக்கு எழுதிய முதலாவது கடிதத்தை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம். இக் கடிதத்தை சந்திரன் என்பவர் எழுதியிருந்தார்.**

ஆனால் வர்த்தகத் துறையில் திறந்த பொருளாதாரக் கொள்கை வலுப்பெற்று விஸ்தீரமடைந்துள்ளது. அது சில பணக்காரரையும் பல வறியவர்களையும் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில் மீட்கப்படாத வீணையாக இருப்பதல்ல உங்கள் பணி. உங்கள் பட்டப்படிப்பு பகட்டான வாழ்விற்கல்ல: உங்களைப் பட்டதாரியாக உதவிய சமூகத்திற்கும் மக்களுக்கும் சேவை செய்வதற்கே ஆகும்.

உங்களைப் போன்றவர்களுக்கு உள்ள சமூகப்பணியை திறம்படச் செய்வதற்குத் தெளிவான சமூகப் பார்வை தேவை. அதைப்பெற தங்கள் நேரத்தைச் செலவு செய்யுங்கள். நீங்கள் கற்கும் ஆங்கில அறிவு இதற்கு உதவும். இந்தத் திசையில் நீங்கள் கற்க வேண்டியவை பலவுண்டு.

தனிநபரால் சாதிக்கக் கூடிய விடயமல்ல இது. நிறுவன ரீதியாக ஒன்று திரள வேண்டும். பல நிறுவனங்களை ஒரு முகப்படுத்த வேண்டும். இளம் சமூகத்தின் ஒத்துழைப்பும் தேவை.

பகிடிவதை என்னும் பலனற்ற முயற்சிக்குப் பதிலாக சமூக மீட்சிக்குப் பங்களிப்போராக எல்லோரையும் ஒன்று சேர்த்து செயற்படுங்கள். இது உங்களைப் போன்ற பட்டதாரிகளின் வாழ்வில் மட்டுமின்றி எல்லா இளஞ்சந்ததியினரின் வாழ்விலும் வசந்தம் வீச வழிவகுக்கும்.

அன்பு கொண்ட
உனது அப்பா

நன்றி
உதயன்.
நாளிதழ்.

## 'கொல்லுங் கரங்கள்'

சூரியகந்தவில் சிறுவர்களைப் புதைத்த கரங்கள் எவையோ
அவையே செம்மணியிலும் இளைஞர்களைப் புதைத்தன.
சூரியகந்தவின் பிணங்கள் மௌனச் சாட்சிகளாகி
கொலை செய்தோர் யாரென அறியப்பட்ட பின்னரும்
கொலைஞர்கட்கு அபயம் அளித்த கரங்கள் எவையோ
அவையே செம்மணியின் புதை குழிகளைத் தோண்டாமல் மறிக்கின்றன.

அடக்குமுறை அதிகாரத்தை வலுப்படுத்தவே
புதை குழிகளில் அத்திவாரம் இடப் படுகிறது.
புதை குழிகளின் எலும்புகள் வெளியேற்றப்படும் போது
அதிகார நிறுவனம் ஆட்டங் காணுகிறது.
பிணங்கள் கிடந்த குழிகளின் வெற்றிடம்
வீழுகின்ற அரசதிகாரத்தை விழுங்கக் காத்திருக்கிறது.
எனவே தான்
புதை குழிகள் மீளத் தோண்டப்படுவதை
அதிகாரத்தின் கரங்கள் மறிக்கின்றன.

அதிகாரம் எத்தனை தான் இனவாதம் பேசினும்
அதன் கொலைக்கரங்கட்கு இன வேறுபாடு இல்லை.
அவை நீளுகிற எல்லை வரை
புதை குழிகளும் நீளுகின்றன.
அதே அரசு, அதே காவற் படைகள், அதே கொலைக்கரங்கள்.
அதே விசாரணைகள், அதே மழுப்பல்கள், அதே மூடிமறைப்பு,
மீண்டும் அதே புதைகுழிகள்.

- ஸ்வப்னா -

## குரங்குகள் பற்றிய ஒரு விசாரணை



குரங்குகள்
குரங்குகள்
குரங்குகள்
ஊரின் மரங்கள் மீது குரங்குகள்
மதில்கள் மீது குரங்குகள்
வீடுகளின் கூரைகள் மீதும்
வீதிவழி எங்கணும்
வாகனங்கள் மீதும்
குரங்குகள்
கண்கள் பாய்கிற ஒவ்வொரு திசையிலும்
கண்கள் விழுகிற ஒவ்வொரு இடத்திலும்
குரங்குகள்
தனியாகவும் கூட்டமாகவும் குரங்குகள்

குரங்குகள் இவை
எங்கிருந்து வருவன எனக் கேட்டேன்
தென்திசையின் வனங்களில் இருந்து என்றனர் சிலர்
மேற்கென்றும் வடக்கென்றும் கூறி மறுத்தனர் சிலர்
கோட்டைச் சுவர்களின் பின் குடியிருக்கும்.
மலைக்காட்டுக் குரங்குகளும்
சேர்த்தி இதிலென்று
திருத்தினர் சிலர்
என்றோ ஒருகாலம் போல்
கடல் கடக்கக்
கற்பாலம் அமைத்து
வந்தவைதாம் இவை யென்றும்
தமக்கிடையே கதை கூறி வாதிட்டு
இருந்தனர் சிலர்
குரங்குகளால் எவருக்கும் தொல்லையேதும்
இல்லையா எனக் கேட்டேன்
குரங்குத் தொல்லை போனால்
வேறேதாவது தொல்லை

தொல்லையே இல்லாத ஊரொன்று உனக்குத்
தெரிந்தால் சொல்லென்றார்கள்
உளவாளிக் குரங்குகள்
கதவிடுக்குகளாலும்
பிரித்த கூரை வழியாகவும்
வீட்டினுள் பார்ப்பதுண்டு
அதிகாரிக் குரங்குகள்
கதவுகளை நீக்கியும்
யன்னல்கள் வழியாகவும்
நினைத்த பொழுது
வீட்டுக்குள் வருவதுடன்
கையில் அகப்பட்டதைத் தின்கிறதும்
சிலசமயம் கொண்டு செல்கிறதும் உண்டு
காவலாளிக் குரங்குகள்
சிறுவர்களை மிரட்டுவதோடு
இளம் பெண்களுடன்
சேட்டைகள் செய்வதும் உண்டு

குரங்குகள் பற்றி
எவரும் எதுவுமே செய்வது
இல்லையா என்று கேட்டேன்
என்ன செய்யலாம் என்று
என்னையே திருப்பிக் கேட்டார்கள்
என்ன செய்தாலும்
குரங்குகள் எப்போதும்
வந்தபடியும் போனபடியும் தான்
என்று ஆறுதலாகவே சொன்னார்கள்
கையில் அனுமார் படம் இருந்தால்
குரங்குகளால் பயமில்லை என்றனர் சிலர்.
தன்னுடைய அனுமார் படத்தையும்
அடையாள அட்டையையும்
குரங்கு கிழித்துவிட்டது என
ஒருவர் முறையிட்டார்
முறையிட்டவருக்குப் பக்தி போதாது என
இன்னொருவர் கண்டித்து விளக்கினார்.

எப்படியும்
எல்லாருக்கும்
குரங்குகளுடன் வாழ்ந்து பழகி விட்டது
குரங்குகள் பற்றிய முறைப்பாடுகளும்
குறைந்து விட்டன
அதைவிடக்
குரங்குகள் கொலைக்கருவிகள் காவுவதில்லை
எவரையும் கடத்திச் செல்வதில்லை
பெண்கள் மீது
பாலியல் வன்செயல் புரிவதில்லை
விசாரணையின்றியோ
விசாரணையுடனோ
எவரையும் மறியலில் வைப்பதில்லை
என்றவாறாக
ஊரில் இப்போது
குரங்குகள் பற்றி நல்லெண்ணமே உள்ளது

குரங்குகள் ஊருக்குள் வந்த காரணம்
காடுகளில் நிகழும் போரெனவும்
மரங்களின் அழிவு எனவும்
உணவு போதாமை எனவும்
குரங்குகளின் சார்பான நியாயமும்
பரவலாக ஏற்கப்பட்டது
போர் முடிந்த பிறகு
குரங்குகளிடமே ஊரை ஒப்படைத்துக்
காட்டுக்குப் போய் விடலாமென்றும்
சிலர் கூறி வருகிறார்கள்
ஆனால்
போர் தான் முடிகிற பாடாக இல்லை

– சிவசேகரம் –

நன்றி - நூலகத்திட்டம்



# கல்நெஞ்சக்காரர் கண்திறவாரோ! நம்மவர்க்கு நடந்ததைக் கூறாரோ!

## யாழ் நகரில் மனதை உருக்கிய மறியல்

கடந்த 25-09-98 அன்று யாழ் நகரில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆனைக்குழுவின் செயலகத்திற்கு முன்னால் ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் சோகமே உருவான நிலையில் கண்ணீர் விட்டுக் கதறியபடி மறியலில் ஈடுபட்டனர். ஏக்கத்தால் இளைத்த எதிர்பார்ப்பால் களைத்த இப்போதாவது ஒரு முடிவை சொல்லுங்கள். இன்றேல் இதிலிருந்தே நாமும் சாவோம் எனக் கூறியே அம் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக மனித நேய அமைப்பினர் நின்றிருந்தனர்.


1996ம் ஆண்டின் நடுப்பகுதியில் குடாநாட்டிற்குள் இராணுவக் கட்டுப்பாடு ஏற்பட்ட பின் ஏறத்தாள எழுநூறு பேர்வரை ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே காணாமல் போகினர். அவர்கள் காடுகளில் வனாந்தரத்தில் சமுத்திரத்தில் அல்லது வான்பரப்பில் காணாமல் போகவில்லை. வீடுகளில் தெருக்களில் வேலைத்தலங்களில் இரவிலும் பகலிலும் காணாமல் போகினர். எவர் மத்தியிலும் அல்ல ராணுவத்தினர் மத்தியில் தான் மறைக்கப்பட்டனர். சந்தேகம் இருந்தால் விசாரித்திருக்கலாம், விசாரனை திருப்தி இன்றேல் தடுத்து வைத்திருக்கலாம். குற்றம் செய்திருந்தால் நீதி மன்றத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கி இருக்கலாம். சிறைகளில் அடைத்தாவது வைத்திருக்கலாம்.

ஆனால் நாகரீக சமூகம் ஒன்று கடைப்பிடிக்கும் அத்தனை வழிமுறைகளுக்கும் அப்பால் அறுநூறுக்கு மேற்பட்டவர்கள் காணாமல் போகச் செய்யப் பட்டிருக்கிறார்கள். சரி காணாமல் போனால் எப்படி எங்கே யாரால் எத்தொகையினர் காணாமல் போகினர் என்றாவது கூறியிருக்க வேண்டும். அது கூட இன்றுவரை கூறப் படவில்லை. அதனால் அதனையே கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் காணாமல் போனோரின் தாய் தந்தையர் மனைவிமார் குழந்தைகள் சகோதரர்கள் உறவினர்கள் கேட்டு வருகிறார்கள்.

இந்நிலையிலேயே செம்மணிப் புதைகுழி பற்றிய அதிர்ச்சி தரும் தகவல் வெளிவந்தது. அதுவெறும் ஊகமோ வதந்தியோ அல்ல நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குமூலம். இதனைக் கேட்ட மக்கள் அதிர்ந்து போயினர். செம்மணிப் புதைகுழிகளைத் திறக்க நடவடிக்கை எடுங்கள் எனக் கேட்கின்றனர். அதனையே தாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு யாழ் நகரில் மனித உரிமை அலுவலகம் முன்பாக மறியல் செய்து கோரிக்கை விடுத்துள்ளனர். காணாமல் போன எம்மவர் பற்றி தெளிவான உறுதியான முடிவினைத் தெரிவியுங்கள், செம்மணிப் புதைக்குழிகளைத் திறக்க நடவடிக்கை எடுங்கள் என்பதே அவர்களது கண்ணீர் சிந்தக் கதறி அழுதழுது சமர்ப்பித்த கோரிக்கைகளாகும்.

தாம் அதிகாரத்திற்கு வருவதற்காக சூரியகந்த புதைகுழிகளைத் தோண்டியவர்கள் தமது தற்போதைய அதிகாரத் தொடர்ச்சிக்கு செம்மணிப் புதைகுழி பாதகமாக அமைந்து விடும் என அஞ்சுவதாலேயே அரசாங்கம் கண்களை இறுக மூடிக்க கொண்டிருக்கிறது. ஆனால் மரண வீடு என்பது ஓரிரு நாட்களில் நடந்து முடிவது வழக்கம். இந்த காணாமல் போனோர் வீடுகளில் ஒவ்வொரு நாளுமே மரண வீடாகவே கழிந்து கொண்டிருக்கிறது என்பதே பரிதாபத்திற்குரியதாகும்.

யாழ். சூரியதேவன்



25-09-98 அன்று யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் முன்பு மறியலில் ஈடுபட்ட மக்கள்.

## மனித மிருகங்கள் வளர்ந்த நாடு

தலைநகர் கொழும்பிலே ஓர் இளம் பெண் தனது கணவருடன் உலாவச் சென்ற வேளை நான்கு மனித மிருகங்களால் கடத்திச் செல்லப்பட்டார். பாலியல் இச்சைக்கு ஆளாக்கப்பட்டு இறுதியில் கழுத்து நெரித்து கொல்லப்பட்டு வீசப்பட்டாள். இக் கொரக் காட்சிக்குப் பலியான அப்பெண் இந்தியாவைச் சேர்ந்தவள். இலங்கைப் பிரசையை மணம் முடித்து இங்கு வந்த போதே இவ் வெறியாட்டத்திற்கு பலியாக்கப் பட்டாள். 'புத்தன் என்ன போதித்தான், போதித்து என்ன சாதித்தான்' என்று கேட்பதை விட வேறு ஏதுதான் செய்ய முடியும்.

ஏன் இந்த அவலம்? எதற்காக இப்படி ஒரு வக்கிரம்? மிருகங்கள் கூட செய்வதற்குத் தயங்கும் இவ் இழி செயலுக்கு எப்படி மனிதர்கள் மாறினார்கள். மதவாதிகள் தொட்டு உளவியலாளர்வரை - பெண்ணிய வாதிகள் முதல் மனித உரிமையாளர் ஈறாக தத்தமக்குரிய நியாயங்களை முன்வைப்பர். அல்லது கண்டனம் செய்து நடவடிக்கைக்குக் கோருவர். ஆனால் மிருகங்களையும் தலைகுனிய வைக்கும் இத்தகைய செயல்கள் தொடர்ந்தும் மனிதர்களால் ஆற்றப்பட்டே வருகின்றன. இவை தனி மனித விருப்பு வெறுப்பு சம்பந்தப்பட்டதா? தனிமனிதர்கள் சங்கமித்தே சமூகமாகி நிற்கின்றனர். எனவே ஒவ்வொரு தவறுக்கும் தனிமனிதரைக் குறைகூறி சமூக அமைப்பின் தவறை மூடி மறைத்து விட முடியாது.

நமது சமூகம் தனிச் சொத்துடமைச் சமூக அடித்தளத்தில் கட்டியெழுப்பப் பட்டதாகும். சுயநலன், சுயசம்பாத்தியம், சுயலாபம், தனிமனித மேம்பாடு அந்தஸ்து, ஆடம்பரம், உல்லாசம், குறுக்குவழி முன்யெற்றம் முடிவற்ற பேராசை போன்றவற்றை அடைந்து அனுபவிப்பதே வாழ்வியல் குறிக்கோள் என வரித்துக் கொள்கின்றனர். இவற்றைப் பெற்றுக் கொள்ள சகல குறுக்குவழிகளும் கீழ்த்தர வழிகளும் மனித விரோத செயல்களும் முன்யெடுக்கப் படுகின்றன. இவற்றுக்கு சுதந்திரம், ஜனநாயகம் சட்டம், ஒழுங்கு என்ற பெயர்களில் தக்க பாதுகாப்பும் கிடைக்கிறது. இவை யாவும் உலக முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்போடு பிணைக்கப் பட்டுள்ளன. அவற்றின் நலன்களுக்காக மனித நேயமற்ற சகல சமூகச் சீரழிவுகளும் ஏதே ஒரு வகையில் பாதுகாப்பும் போஷிப்பும் பெறுகின்றன.

கடந்த மூன்று தசாப்தங்களாக இந்த நாடு ராணுவ-யுத்த வளர்ச்சி பாதையில் தான் பயணம் செய்து வந்திருக்கிறது. யுத்தத்தை மூட்டியவர்கள் வளர்த்தவர்கள் இன்னும் முன்னெடுப்பவர்கள் மனிதர்கள் மிருகங்களாகி வருவதைத்தான் காண்கிறார்கள். சட்ட ரீதியாகவே ஆயுதம் ஏந்திய மனிதர்கள் மனித மிருகங்களாக மாறி நிற்கும் போது அதற்கு அப்பாலானவர்கள் தம்மால் முடிந்த அளவிற்கு அதே வழியில் செயற்பட முற்படுவதை எவராலும் தடுக்கவியலாது. 1971ல் கதிர்காம அழகியை நிர்வாணமாக்கி சுட்டு வீழ்த்தி புதைத்தவன் ஒரு ராணுவ அதிகாரி. அன்று தொடங்கிய பெண்கள் மீதான அநாகரியச் செயல் இன்றுவரை தொடர்கிறது. வடக்கு கிழக்கின் யுத்தத்தின் மூலம் பன்மடங்காகிச் செல்கிறது. மாணவி கிருஷாந்தி, இளம்பெண் ராஜினி, குடும்பப் பெண் கோணேஸ்வரி என்பவர்களின் ஊடாக எத்தனை எத்தனை பெண்கள் பலியாக்கப் பட்டனர். அண்மையில் சாவகச்சேரியில் பன்னிரண்டு வயது மாணவி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டுள்ளாள். அதனைச் செய்தவன் ஒரு ருாணுவத்தினன். தான் எந்தத் தாயின் பிறப்பு உறுப்பின் வாயிலாக இவ் உலகில் பிறந்தானோ அதே பிறப்புறுப்பை தனது பாலியல் இச்சைக்கு உள்ளாக்கி சிதைத்தது மட்டுமின்றி அதன் மீதே வெடிகுண்டை வெடிக்கச் செய்து கோணேஷ்வரி என்ற நான்கு பிள்ளைகளின் தாயைக் கொன்றழித்த மனித மிருகங்களின் செயல் சாதாரண மிருகங்களையே வெட்கித் தலைகுனிய வைத்தது. அத்தகையவர்களை தாய் நாட்டைக் காக்கும் புனித் தியாகிகள் எனப் போற்றுவதற்கும் அவர்களது மிருகத் தனங்களை மறைப்பதற்கும் ஒரு கூட்டம் நாட்டில் இருக்கும் போது அதனிலும் பார்க்க மோசமான மிருகத் தனத்தைச் செய்யுமாறு ஏன் தான் சாதாரண சிவில் சமூக உறுப்பினர்கள் முன்வரமாட்டார்கள்.

எனவே இன்றைய சமூகக் கட்டமைப்பும் அதன் கீழான பொருளாதாரமும், அரசியல் சமூகக் கலாச்சாரச் சூழல்களுமே தனி மனித வக்கிர வளர்ச்சிகளின் ஊற்று மூலங்களாகும். அத்தகைய ஊற்று மூலங்கள் பெருக்கெடுத்துப் பாய்வதற்கு இன்றைய நாட்டின் யுத்த சூழல் தகுந்த வாய்ப்பு வசதிகளை வழங்கி நிற்கின்றன. அதனால் ஒவ்வோர் நிலையிலேயும் மனிதர்கள் மிருகங்களாக மாற்றப்படுகின்றனர். மனித நேயமற்ற மிருக உணர்வுகள் மேலோங்கி சக மனிதர்களையே பலி கொள்ளின்றன. இத்தகைய மனித மிருகத்தனங்கள் எவ்வகையிலும் அங்கீகரிக்கப்படக் கூடாது. எவ்வாறு ஆனால் வெறுமனே சட்டங்களாலும் போதனைகளாலும் இம் மனித வக்கிரங்கள் மாற்றப்பட முடியாதவைகளாகும். அவை தோற்றம் பெறுவதற்கு தளமாகவும் களமாகவும் அமைந்து காணப்படும் சமூக அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். அதனையே தொடரும் கொடூரச் சம்பவங்கள் எடுத்துக் கூறுகின்றன.

—[illegible]—

## முனைவர் கோ. கேசவன் மறைவுக்கு அஞ்சலி

மாக்சிச லெனினிச வழிநின்று தமிழ் இலக்கிய ஆய்வுத்துறையில் தாக்கம் மிக்க பங்கும் பணியும் புரிந்து வந்த முனைவர் கோ.கேசவன் தனது 51வது வயதில் கடந்த செப்டம்பர் 11ம் திகதி திருச்சியில் இயற்கை எய்திவிட்டார். அவரது மறைவு உடனடியாக இட்டு நிரப்பப்பட முடியாத ஒரு இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. பேராசிரியர் கைலாசபதியின் ஆய்வு, விமர்சனப் பார்வையை அதன் வழியில் மேலும் செழுமைப் படுத்தி முன்னெடுத்து வந்ந தோழர் கேசவனின் மறைவுக்கு புதியபூமி தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்து அவரது குடும்பத்தினருக்கு அனுதாபத் தையும் தெரிவித்து கொள்கின்றது.

## கவிஞர் சாருமதிக்கு அஞ்சலி

மாக்சிச இடதுசாரி எழுத்தாளரும் சிறந்த கவிஞருமான சாருமதி கடந்த மாதம் காலமாகி விட்டார். சாருமதி மாக்சிசம் லெனினிசத்தையும் மக்கள் இலக்கிய கோட்பாட்டையும் முன்னிருத்தி வந்த மக்கள் எழுத்தாளர் ஆவார். அவரது படைப்புகள் எந்த வேளையிலும் மக்கள் என்ற சட்டகத்தை மீறிச் சென்றதில்லை. அவர் மானிட விடுதலையின் உயர் விழுமியங்களினால் வழிநடத்தப்பட்டு வந்த ஒரு எழுத்தாளராகவே வாழ்ந்து மறைந்தார். அவரது மறைவுக்கு புதியபூமி தனது இரங்கல் அஞ்சலியைத் தெரிவித்து அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கயையும் தெரிவித்துக் கொள்கின்றது.

## சசி கிருஷ்ணமூர்த்திக்கு அஞ்சலி

நவீன இலக்கியத்தின் போக்குகளை இடதுசாரிக் கண்ணோட்டங்களின் ஊடாக நோக்கி தரமான ஆக்கங்களை வழங்கி வந்தவர் மறைந்த சசி கிருஷ்ணமூர்த்தி. அவர் ஓர் எழுத்தாளரும் கலைஞருமாவார். அவரது சினிமா பற்றிய பார்வையும் சமகாலச் சினிமா பற்றிய விமர்சனங்களும் தாக்கம் மிக்கவையாகும். தேசிய கலை இலக்கியப் பேரவையோடும் அதன் சஞ்சிகையான தாயகத்தோடும் மிக நெருக்கமாக இருந்து செயல்பட்டு வந்தவர் சசி கிருஷ்ணமூர்த்தி விமான விபத்தில் அவர் மறைவுற்றமை அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த அனுதாபத்திற்குரியதாகும். அவருக்கு புதியபூமி தனது அஞ்சலியைத் தெரிவித்து குடும்பத்தினருக்கு ஆறுதலையும் கூறிக்கொள்கிறது.

### மலையகத்தில்—

5ம் பக்க தொடர்ச்சி

அவசியமாகும். அந்தவேளை மலையகத்தைப் பற்றிய [illegible] பேரினவாதிகள் [illegible] செய்தும் வருகின்றனர். [illegible] எதிர்ப்பு தேசிய முன்னணி [illegible] சிங்கள வீர [illegible] வரை செய்யும் மலையக மக்களுக்கு விரோதமான பேரினவாதக் கூச்சல்களைத் தடுத்து நிறுத்த அரசாங்கமோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ தயாரில்லாத நிலைதான். ஏனெனில் அதில் குளிர் காய்ந்து கொள்வது அவர்களுக்கு எப்போதும் தேவையானதாகும். எனவே மலையக மக்கள் பல முறைகளிலும் சிந்தித்து தமது இருப்பு எதிர்காலம் என்பனவற்றுக்கு நிதானத்துடன் அணிதிரண்டு செயல்படவேண்டிய தேவையை எதிர்நோக்கிச் செல்ல வேண்டும். ■

நன்றி - நூலகத்திட்டம்



# அக்கம் பக்கம்

ஐ.ஐ.ஒ

## பழக்கமும் வழக்கமும் ஒழுக்கமும்

இப்பொழுதெல்லாம் பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் பற்றிப் பெரியவர்கள் அடிக்கடி குறை கூறத் தொடங்கியுள்ளனர். குழந்தைகள், பிள்ளைகள், சிறுவர்கள், இளஞர்கள் என்றெல்லாம் பேசப்படுகிறவர்களைப் பற்றிப் கவலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்று விசுவரூபம் எடுத்துள்ளது என்று கூடச் சொல்லலாம். கூட்டங்களிலும் விழாக்களிலும் பேச்சாளர்கள் இது பற்றிச் சொற்பொழிவாற்றுகிறார்கள். கோயில்களிலும் சனசமூக நிலையங்களிலும் பண்டிகைகளின் போதும் கொண்டாட்டங்களின் போதும் சான்றோர்கள் இதுபற்றி எடுத்து விளக்குகிறார்கள். போதகர்கள் புத்தி புகட்டுகிறார்கள். பத்திரிகைகள் ஆசிரியத் தலையங்கம் வரைகின்றன. வாசகர்கள் ஆசிரியருக்குக் கடிதங்கள் அடுக்கடுக்காக அடிக்கடி எழுதி வருகிறார்கள். எல்லாம் நல்லது தான்.

மூத்தோர் சொல்லும் இந்த அமுத வார்த்தைகள் எல்லாம் ஆண்டு முழுவதும் சொரியப்படுவது உண்டு என்றாலும், பல்கலைக் கழகம் கல்வியாண்டுகள் தொடங்குகிற மூட்டங்களிலே இவை பலமான பாட்டங்களாக, சிறு வெள்ளங்களாகக் கூடப் பெருகுவதுண்டு. அதற்குக் காரணம் பல்கலைக் கழகங்களில் மாத்திரமல்ல, ஆசிரியர் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் எனப்படுவனவற்றில் கூட, 'பகிடிவதை' என்ற முகப்பாத்திகளும் சேட்டைகளும் 'புதுவர்களை' வரவேற்று உபசரிக்கும் பொருட்டு, பல்வேறு அளவுகளிலும் படித்தரங்களிலும் தலைகாட்டுவது தான். உயர்-கல்வி நிறுவனங்களில் மட்டு மல்லாமல், பிரபலமான உயர் நிலைப் பாடசாலைகளிலுங்கூட இந்த முகப்பாத்திகள் பொங்கிச் சரிவதை அதிகமதிகமாகக் காணக் கூடியதாய் உள்ளது.

இந்தச் சேட்டைகள் மேற்சொன்ன நிறுவனங்களின் சுற்று மதில்களின் எல்லைகளுக்கு உள்ளே மாத்திரம் நின்று விடுவன அல்ல. அவை பக்க வழிகளாலும் படலை வாசல்களாலும் நுழைந்து வெளியேறி, தெருத்திண்ணைகளிலும் உலாவித் திரிய முற்படுவதுண்டு. வண்டி வாகனங்களிலும் கொடியேற்றம்-சப்பறம்-தேர்-தீர்த்தம்-பூங்கா வனங்களிலும், கோஷ்டி கானங்களின் இடையேயும், விளையாட்டுத் திடல்களிலும், போட்டிகளின் இடையிலும் (பிரதானமாக) இறுதியிலும் தலைவிரித்தாடுவது, மெல்ல மெல்ல வழமையானதொரு சங்கதியாக மாறிக்கொண்டு வருகிறது. இந்த முன்னேற்றங்களும் 'வளர்ச்சிகளும்' தான் சான்றோர்களைப் பெரிதும் கலக்குகின்றன என்று கருதலாம்.

அண்மையிலே பெரியார் ஒருவர், இந்த விதமான சீரழிவுளைக் கட்டுப்படுத்தி நிறுத்தும் வல்லமை, தாய்மார்களுக்குத்தான் உண்டு என்று கருத்துத் தெரிவித்தார். இளைஞர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீட்டிலிருந்து தான் வருகிறார். வீட்டிலே பிள்ளைக்கு வேண்டியவற்றை வழங்கி அன்பாட்சி செலுத்துகிற முகாமைப் பொறுப்பை எற்று நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் தாய்மார்கள் தான். எனவே, இளம் பிள்ளைகளை வழிக்குக் கொண்டு வருவதிலே. அன்னையர்கள் பலன் மிகுந்த பாத்திரத்தை வகிக்கலாம், வகிக்க வேண்டும் என்பது அந்தப் பெரியவரின் கருத்தோட்டமாகும் அந்தக் கருத்தோட்டத்திலும் நியாயங்கள் இல்லாமல் இல்லை.

அதே வேளை, வாழ்க்கை விழுமியங்களையும் நடத்தை நியமங்களையும் நிலைநாட்டி விடலாம் என்று கருதுவது, பிரச்சினையை அள்வு மீறி எளிமைப்படுத்துவது ஆகும்.

தலைமுறை இடைவெளி என்பது, நம் சமூகத்துக்கு மாத்திரமே உரிய ஓர் இடர்ப்பாடு அல்ல. உலகம் முழுவதிலுமே இந்த இடர்ப்பாடு பல்வேறு அளவுகளிலும் தரங்களிலும் காலந்தேறும் முனைப்புக் காட்டி வரும் ஒன்று தான். பல்வேறு சமூகங்களும் பல்வேறு வேகங்களிலே மாறுகின்றன. இந்த மாற்றங்களின் வேகம் எல்லா இடங்களிலும் சூழல்களிலும் ஒரே அளவில் இருப்பதில்லை, ஒரு சீராகவும் இருப்பதில்லை வளர்ந்தோருக்கும் வளர்வோருக்கு மிடையே உள்ள உறவின் தன்மைகளும் இடத்துக்கு இடம் காலத்துக்குக் காலம் மாறுதல்களுக்கு உள்ளாவதும் கண் கூடான அனுபவ உண்மைதான்.

இனி, ஒவ்வொரு தலைமுறை யினரும் தாம் தாம் தமது வளர்ச்சிக் காலங்களின் போது பெற்ற அனுபவங்களினூடாகவும் கல்வியின் பேறாகவும் சிற்சில மனப்பான்மை களையும் மனச்சாய்வுகளையும் நம்பிக்கைகளையும் ஈட்டிக் கொள்ளுகிறார்கள். முந்திய தலைமுறையினர் பெற்றுக்கொண்ட கல்வியறிவு பழக்கவழக்கங்களுக்கும் அடுத்த தலைமுறையினர் பெறுகின்ற அறிவு-திறன்-மனப்பாங்குகளுக்கு மிடையே வேறுபாடுகள் உண்டு. ஆகையினாலே, முந்திய தலைமுறையினரின் போதனைகளைப் பிந்திய தலைமுறையினர் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள் என்றோ, ஏற்றுக் கொள்வார்கள் என்றே நாங்கள் எதிர்பார்க்க முடியாது. முகத்துக்கு நேரே முரண்பட்டு மறுத்து எதிர்க்காமல்-மரியாதையின் நிமித்தம் ஒரு வேளை அவர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கலாம். ஆனால், உள் மனங்களிலே வேறு விதமான கருத்தோட்டங்கள் இருத்தல் கூடும்.

ஒரு சின்ன எடுத்துக்காட்டு, யாழ்ப்பாணத்திலே உள்ள ஒரு பிரபல கல்லூரியிலே 'ஆசிரியர் தினம்' கொண்டாடப் பட்டதாம். அன்று அந்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பூமாலைகள் கட்டிக் கொண்டு வந்து மரியாதை செய்தனர். பரிசுகளும் பாராட்டுக்களும் வழங்கினர். அவ்வளவில் நிற்கவில்லை. ஆசிரியர்களின் காலடியில் விழுந்து கும்பிட்டு ஆசி பெற்றுக் கொண்டனர். பழமைப்பற்றார்கள் இப்படிப்பட்ட கொண்டாட்டங்களைப் பார்த்துப் புளகம் அடையலாம்-ஆனால், அந்த மாணவர்களிற் சிலராவது தமக்குள்ளே புறுபுறுத்திருப்பார்கள் என்பது நிச்சயம். மாணவர்கள் ஆசிரியர் முன்னிலையிலே அடங்கி ஒடுங்கி மண்டியிட வேண்டும் என்று இக்காலத்து ஆசிரியர்கள் எவரும் எதிர்பார்ப்பதில்லை. 'சித்திரப் பாவையின் அந்தக அடங்கி' இரு என இருந்து, நில் என நின்று, வா என வந்து, போ எனப் போய், 'நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவை போல' மாணவர்கள் இயங்க வேண்டும் என்று இன்றைய கல்வியாளர்கள் எதிர்பார்ப்பதில்லை. சிறு பிள்ளைகளின் கல்வியிலே, விளையாட்டு முறை எனப்படும் 'பிளேய் வேய் மெதட்' ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்ற காலம், இந்தக் காலம், வளர்ந்த பிள்ளைகளின் கல்வியிலே, செயல் மூலம் உணர்தல், பரிசோதனைகள், செய்கைத்திட்டங்கள், பரிசீலனைகள், வாக்குவாதங்கள், கலந்துறை யாடல்கள், என்றெல்லாம் சுயாதீனமான கற்கை முறைகள் உலகெங்கும் நடைமுறையில் உள்ள காலம், இந்தக் காலம். திறந்த மனப்பான்மையும், பகுத்தறிவும், விரி சிந்தனையும் விரும்பி வரவேற்கப்படுகின்ற காலம். கல்வி அனுபவம் என்பது அடைந்து மூடப்பட்ட ஒன்றாக 'ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது' -என்ற பாங்கிலே, இறுகிப் போன திண்மங்களின் வடிவிலே, கட்டப்பட்ட முன் முடிவுகளாக இன்று இருப்பதில்லை. இதனால் மாணவர்களை ஏவல் கொள்ளும் ஆட்சியாளர்களாக ஆசிரியர்கள் இல்லை, அந்த ஆட்சியின் கீழ் முடங்கிப்போன ஏவலாளர்களாக மாணவர்களும் இல்லை. கீழ் வகுப்புகளிலே பிள்ளைகளின் நண்பர்களாகவும் பாதுகாவலர்களாகவும் ஆசிரியர் செயலாற்றுகிறார். வகுப்பு ஏற ஏற மேல் வகுப்புகளிலே மாணவர்களின் தோழர்களாகவும் கூட்டாளிகளாகவும் அவர்கள் மாறுகிறார்கள். அப்படி மாற வேண்டும் என்பது இன்றைய கல்வி இயல் அறிஞர் உலகத்தின் எதிர்பார்ப்பு.

ஆகவே தான் காலடிகளில் விழுந்து கும்பிடுவது, பாதபூசை செய்வது போன்ற கிரியைகள், பாவனைகள் ஆரோக்கியமான பலன்களைத் தருமா என்பது ஐயத்துக்கு உரியதே.

அப்படியானால், மனித உரிமைகளையும் மாண்பையும் மதித்து நடக்கும் மனப்பான்மையை எப்படி வளர்க்கலாம்? பழக்க வழக்கங்களையும் ஒழுக்கங்களையும் மாத்திரமல்ல அறம்-மறம் நலம்-தீங்கு, நியாயம்-அநியாயம். சரி-பிழை என்பன பற்றிய எண்ணங்களையும் ஊக்குவதற்கு, பகுத்தறிவு நோக்கின் துணையை நாடுவதே பொருத்தமாகும். விஞ்ஞான மனப்பான்மையின் உதவி தான் இங்கு விளைதிறன் மிக்கதாய் அமையும் பாமரர்களாய் விலங்குகளாய் மாந்தர்கள் இருந்த பழைய காலங்களிலே, 'வல்லது வெல்லும்' என்ற காட்டுச் சட்டம் தான் மேலோங்கி நின்றது. இனியும் அதுபல்வேறு வடிவங்களிலே மேலோங்கி நிற்கும். ஆனால் மனித நாகரீகம் பண்பாடு என்று வரும் போது மற்றவர்களின் இருப்பையும் உரிமையையும் மதிக்கும் தேவைகள் மேன்மேலும் உணரப்படுகின்றன. நம்மால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது என்று கருதுவது ஒரு நிலை, நம்மால் மற்றவர்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டும் என்று கருதுவது அடுத்த நிலை, இவை இரண்டும் தான் ஒழுக்க நெறிகளுக்கு அடிப்படையாய் உள்ளவை. விஞ்ஞான வழிப்பட்ட பகுத்தறிவுக்கு இசைவான நியாயங்களினால் நமக்கு வேண்டிய ஏனைய விழுமியங்களின் விரிவுகளை எல்லாம் இந்த இரண்டு அடிப்படைக் கோட்பாடுகளிலு மிருந்து உய்த்தறிந்து கொள்ளலாம். அப்படியான அணுகுமுறை இன்றைய இளந்தலைமுறை மினருக்கு அதிகம் ஏற்புடையதாய் இருக்கும்.

இளையோரிடையே காணப்படும் வன்செயல் நாட்டத்துக்கு உலகமெங்கும் மலிந்து போயிருக்கும் பல்வகை நெருக்கடிகளும் போர்த்தயாரிப்புகளும் சண்டைகளும் சமர்களும் சவால்களும் பிறிதொரு வகையான ஏத்துக்கள். தொழில் நுட்பவியலின் திறனாற்றல்கள் எல்லாம் பேரழிவுக்குப் போர்க்கருவிகளை விருத்தி செய்வதற்கே பிரதானமாகப் பிரயோகிக்கப் படுகின்றன. வல்லரசுகளின் இந்தப் போக்கும் சுமுகமான தீர்வுகளைச் சிக்கலாக்குகின்றன. ● ● ● ● ● ●

## கிளின்டன் பாலியல் விவகாரத்தின் பக்கமும் மறுபக்கமும்

இன்றைய உலகில் தொடர்பூடகங்களின் செல்வாக்கும் செழிப்பும் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் கைகளிலே தான். உள்ளூர் பத்திரிகை வானொலி தொலைக்காட்சி தொட்டு உலக ஊடகச் சாதனங்கள் வரை அவர்களாலேயே ஆட்டிப்படைக்கப் படுகிறது. அவற்றின் ஆக்கச் செயல்களை விட அழிவுகரமான போக்குகளே அதிகம் எனலாம்.

அத்தகைய தொடர்பூடகங்களின் பிரசாரத்தில் ஒரு பகுதி இளம் தலைமுறையினரை எந்தெந்த வழிகளில் சீரழிக்கலாம் என்பதிலேயே செலவிடப்படுகிறது. பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பன ஒரு புறத்தாலும் தொலைக்காட்சி-இன்ரநெற் போன்றன மறுபுறத்தாலும் தாக்கி வருகின்றன. ஒரு பகுதி இளம் தலைமுறையினர் போதை வஸ்துக்கு அடிமையாகி வருவது போன்றே தொலைக்காட்சி-இன்ரநெற் போன்றவற்றுக்கும் தம்மை அடிமைப்படுத்தியுள்ளனர்.

இந்த சூழலைப் புரிந்து கொண்ட ஏகாதிபத்திய முதலாளித்துவ உலகம் பாலியல் விடயங்களுக்கு பலவகையிலும் முன்னுரிமை கொடுத்து குப்பை குப்பைகளாய் கொட்டி வருகின்றன. அவற்றை சலிக்க விடாமல செய்வதற்கு உலகின் பிரபலங்களின் அந்தரங்க பாலியல் வாழ்க்கை விடயங்களைப் பிரசாரப்படுத்துவதை உச்சமாக்கி கொள்கின்றனர். ஏற்கனவே பிரித்தானிய மக்களின் உழைப்பில் உல்லாச சீவியம் நடாத்தும் அரச குடும்பத்தின் அசிங்கங்களை டயானா மூலம் வெளிக்கொணர்ந்தனர். ஒரு புறம் டயானாவை பொது நலத் தேவதையாகவும் மறுபுறம் பாலியலுக்கான கனவுக் கன்னியாகவும் பிரச்சாரம் செய்தார்கள்

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க.)

## மூலமந்திரம்

-ஒட்டுக்கூற்றர்-

விஞ்ஞானி தம்பரின் மருகனார்-முனைவர்
கிஞ்ஞாலி இராமன் ஹிஸ்ட்ரி எழுதுவார்.

✵ ✵ ✵

-பூனையும் பூதியும் கூடிய கூடலில்

சேனாவரையன், குத்தியன் தோன்றினர்.
சேனாவரையன் மைந்தன் சேந்தன்.
சேந்தன், ஆந்தை, மாந்தை, ஓத்தி,
வழுதி, புழுதியார், அழகி, பழுதிலார்,
காத்தார், கார், பாத்தார், பாரி,
வள்ளி, மள்ளார், கிள்ளி, கீரனார்,
என்றிவ்வாறு தொடர்ந்து, தொடர்ந்து
நூற்றெட்டாவது தலைமுறை முடிய,
'தம்மளர்' என்ற சாகியம் வந்தது.

-சிம்மமும் சீலியும் இல்லறம் நடாத்த,
கங்கா, யமுனா, டிங்கிரி தோன்றினர்.
டிங்கிரி என்பார் மைந்தர் காமினி.
மணிக்கே, நாயக்க, மினிக்கே, கோமல,
சமற, தாயகே, லெகம, சாமல,
சுமணே, குமறகே, சோம, குணாகுணே,
பசற, பண்டார, திசற, செய்க்கற
எனவாங்கு,
இப்படித் தொடர்ந்து தொடர்ந்தே
'சிம்மளர்' எனப்படும் சிலனீஸ் நிமிர்ந்தனர்.

-இவற்றை நாங்கள் எடுத்து நோக்கினால்,
ஆதி வாசிகள் ஆர் என அறியலாம்.
(பூனையா, சிம்மமா புதியது:பழையது?
இந்த வினாக்கள் கருதத் தக்கன.)
படைப்புக் காலம் தொட்டு, நிலத்திலே
வேரூன்றியவர் மாத்திரம் இந்த
ஊர் மனை மீதில் உரிமை உடையவர்.
ஒறிஜினல் உள்ளூர்ப் பிறவிகள் இவர்களே.
(வந்தேறு குடிகள் மற்றையோர் என்க.)
தாயகம் என்னும் கோட்பாடும்
இதன்வழி உறுதி பண்ணத் தக்கது.

கிஞ்ஞாலி இராமன் ஹிஸ்ட்ரி எழுதுவார்.

எழுதுவாரா அவர்? ஏனவர் எழுதார்?
'புத்தகம் இயற்றும் போட்டி ஒன்றிலே
பத்து நூறாயிரம் பரிசில் தரலாம்'
என்று நாங்கள்
எடுப்புடன்,
மிடுக்குடன்,
மின்னணு மீடியா வாயிலாய்,
கலாதியாய்
விளம்பரம் பண்ணினால் விடுவரோ, முனைவர்?

முதலாம் பரிசிலை வழங்கி
விருதும் தந்து விழாக்கள் எடுக்கலாம்.
புத்தகம் சொல்லும் புது வரலாற்றைப்
பள்ளி தோறும் படிப்பித்திடலாம்.
பாடநூல் ஆக்கியும் சட்டம் இயற்றலாம்.
புலமை பரிசில், போட்டிகள், பணிக்களம்,
சரித்திர தினங்கள், சமூகத் திருநாள்,
எல்லாவற்றிலும் இதனையே
கட்டாய மூல மந்திரம் ஆக்கலாம்.

பட்டாளம் செய்யத் தவறிய பணிகளும்
கட்டாய மூல மந்திரம் செய்யுமே.

நன்றி - நூலகத்திட்டம்

## கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் தூங்குகிறதா?

1996ம் ஆண்டு உயர்தரப் பரீட்சை மூலம் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான மாணவர்கள் இன்னும் அழைக்கப்படவில்லை. வன்னியின் உட்பகுதிகளில் இருந்து பலசிரமங்கள் மத்தியில் வவுனியா வந்து தங்கி ஆங்கில முன்னோடிப் பயிற்சியும் முடித்துப் பல வாரங்களாகியும் கிழக்கிலங்கை பல்கலைக் கழக நிர்வாகத்திடம் இருந்து அழைப்புக் கிடைக்கவில்லை. கேட்டால் பத்திரிகையில் வெளியிடுவோம் அதனைப் பார்த்து வாருங்கள் என்று கூறுகிறார்களாம். காத்திகை 10ம் திகதி மட்டுமே வவுனியாவில் தங்க அனுமதி வழங்கப்பட்ட மாணவர்களின் கதி என்ன? உனறே பெற்றோரும் மாணவர்களும் பரிதவிக்கின்றனர். அதே காலப் பகுதியில் தெரிவான யாழ் பல்கலைக் கழகம் மொறட்டுவ பல்கலைக் கழகங்களுக்கு மாணவர் அழைக்கப்பட்டு விட்டனர். அப்படியாயின் கிழக்குப் பல்கலைக் கழக நிர்வாகம் நீண்ட தூக்கத்தில் இருக்கிறதா? என்றே பலரும் கேட்கின்றனர். பெயருக்கு பல்கலைக் கழகமா? அல்லது தமிழ் மாணவர்களின் எதிர்காலத்திற்குப் பல்கலைக் கழகமா? அங்கே நிாவாகச் சண்டை ஒரு புறம் நீ பெரிது நான் பெரிது என்று ஆளை ஆள் அறுப்பு மறுபுறம் பிரதேசவாதத்தில் மூழ்கி எழுவது இன்னொரு புறம். அதனால் உரிய காலத்தில் உரியவற்றைச் செய்வதில் தாமதங்கள் தான் ஏற்படுகின்றன போலும்.

## எல்லாம் அவன் செயலாகிறது!

இன்று இலங்கை யுத்த பூமி குண்டுகளும் துப்பாக்கிகளும் கவச வாகனங்கள் யுத்த விமானங்களும் நிறைந்த நாடு. வடக்கு கிழக்கு வெடிமருந்துப் புகையால் மூடப்பட்டுள்ளது. யுத்தத்திற்கு திசைவழி காட்டி ஆயுதங்களும் அவற்றுக்கான வெடிமருந்துகளும் மட்டுமின்றி ஆலோசனைகளும் வழங்கிய முதல் தரப் பெயர்வழிகள் அமெரிக்க ஆளும் வர்க்கத்தினரே. அதனால் எத்தனை உயிர்கள் பறிபோயின எத்தனை பேர் முடமாகினர், வாழ்விழந்தோர் தொகைதான் எவ்வளவு. தற்போது அமெரிக்க ராணுவத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் குழு ஒன்று கொழும்பு வந்து காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு அறுவைச் சிகிச்சை உட்பட சிகிச்சை அளித்து வருகின்றது. என்னே மனிதாபிமானம். ஆயுதமும் வெடிமருந்தும் ஆலோசனையும் வழங்கியவனும் அவனே. பின் காயமடைந்து கை கால் இழந்து குற்றுயிராக இருப்பவர்களுக்கு சிகிச்சை அழிப்பவனும் அவனே. இலங்கையில் எல்லாம் அவன் செயலாகவே நடந்து வருகின்றன. இது எங்கே சென்று முடியப் போகிறதோ யார் அறிவார்?

## தமிழ்ப் பாடசாலைகளின் கதி

தமிழ்ப் பாடசாலைகள் புறக்கணிக்கப்படுவது நாட்டில் சர்வசாதாரணம். அதுவும் வகதியற்ற பகுதிகள் பிரதேசங்களில் படமடங்காக நடைபெறுகின்றன. அதற்காக சில பாடசாலை நிர்வாகங்கள் அதிபர் ஆசிரியர் இடையிறாது முயற்சிகளும் எதிர் நீச்சலும் போடுவர். சிலரோ நமக்கென்ன என்று நடந்து கொள்வதுடன் இருப்பதையும் கெடுத்துச் சுருட்டிக் கொள்வர். கேட்டால் ஆயிரம் நியாயங்கள் கூறுவார்கள்.

இவ்வாறு புறக்கணிக்கப்பட்டு தலை நிமிர முடியாது வசதியற்ற நிலையில் காணப்படும் ஒரு பாடசாலையே தெகிவளை தமிழ் வித்தியாலயம். மேல் மாகாண பிலியந்தல கல்வி வலயத்திற்குள் வரும் மேற்படி பாடசாலையை முன்னேற்ற எடுக்கும் முயற்சிகள் சாண் ஏற முழம் சறுக்குவதாகவே உள்ளது. ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அதிபர் ஆசிரியர் பெற்றோர் கல்வி அமைச்சு ஆகிய தரப்பினர் கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும். ஆனால் மேற்குறித்த பாடசாலை அத்தகைய முயற்சி எதிழும் ஈடுபட்டதாக இல்லை என்றே பெற்றோர் கூறுகிறார்கள். அதிகாரம் சுயநலம் அக்கறை இன்மை மாணவர்களை அலட்சியம் செய்வது மட்டும் அங்கு தாராளமாக இடம் பெறுகின்றன என்றே பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதை வற்புறுத்தி சில ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் பெற்றோர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் ஈடுபட்டு வருவதாக அறியமுடிகிறது.

●●●●●●●●●

## ஆளுநர் பதவி பறிபோனது ஏன்?

வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் காமினி பொன்சேகா தனது பதவியைத் துறந்துள்ளார். கடந்த ஏழு வருடங்களாக வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் ஆட்சியாகவே இருந்து வந்துள்ளது. பொதுசன முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியில் விரக்தியடைந்திருந்த காமினி பொன்சேகாவிற்கு மேற்படி பதவியை வழங்கியது. கொஞ்சம் கொஞ்சம் தமிழ்ப் பேசக்கூடிய காமினி பொன்சேகாவை அரசியல் உள்நோக்கத்திற்காகவே அரசாங்கம் பதவி வழங்கிப் பயன்படுத்தியது. ஆனால் தற்போது அதிலிருந்து அவரைக் கழட்டி விட்டும் உள்ளது. வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகம் என்பது அதிகாரிகளின் நிர்வாகமாகவே இருந்து வருகிறது. அங்குள்ள அதிகாரிகள் யாவரும் மாகாண அமைச்சர்கள் போன்றே செயல் படுகிறார்கள். சகலவகை வாய்ப்பு வசதிகளையும் நன்றாக சுவைத்து அனுபவிப்பதில் அவர்களுக்கு நிகர் அவர்களாகவே உள்ளனர். காரணம் தட்டிக் கேட்க எவருமே இல்லை. அப்படியாக ஒரு உயர் கல்விச் செயல் அதிகாரியைத் தட்டிக் கேட்கப் புறப்பட்டதாலே ஆளுநரின் பதவி பறிபோனதாகத் திருமலையில் மக்கள் பேசிக் கொள்கின்றனர். அந்த அதிகாரி பிடிக்க வேண்டிய இரண்டு அரசாங்க ஆதரவுக் கால்களைச் சிக்கனப் பிடித்து கொண்டாராம். ஒருவர் தமிழர் கூட்டணியிலும் மற்றவர் முஸ்லீம் காங்கிரசிலும் உள்ள தலைகளாம். அந்த அதிகாரி நாட்டில் எங்கிருந்தாலும் செல்வாக்காக இருக்கக் கற்றுக் கொண்ட அனுபவசாலி. வடக்கில் இருந்தபோதும் அதே செல்வாக்குத்தான். கிழக்கிலும் குறையாத நிலைதான். தெற்கில் விட்டாலும் அவரால் செல்வாக்காக இருப்பதற்கு சகல திருகுதாளங்களையும் செய்யக்கூடியவர் என்றே மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

## அமெரிக்க ஜனாதிபதிகள் புனிதர்களல்லர்

### கிளிங்டன் பாலிய.....

10ம் பக்க தொடர்ச்சி

இன்றும் அந்த அசிங்கக் கதைகளால் பத்திரிகைகளை விற்பனையாக்குவோர் இருந்து வருகின்றனர்.

டயானா கதை ஆறிப் போகுமுன்பாக உலகின் முன் பிரசாரப்படுத்தும் அதி முக்கிய விடயமாக கிளிங்டன்–மோனிகா பாலியல் உறவு பற்றிய பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த விவகாரத்தில் புதுமையும் இல்லை புதினமும் கிடையாது. அமெரிக்க ஏகாதிபத்திய சீரழிவுக் கலாசாரத் திற்கான ஒரு பதச் சோறாகவே அதனைக் கொள்ள முடியும். ஆனால் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கும் பிரசாரங்களைப் பார்த்தால் இதுவரை அமெரிக்காவோ வெள்ளை மாளிகையோ கண்டிராத ஒன்றாகவே கதை அளக்கப்படுகிறது.

இக்கதைகளின் மூலம் இரண்டு விடயங்களை அவதானிக்க முடிகிறது. ஒன்று அமெரிக்கா ஒரு உயர்ந்த ஜனநாயகப் பண்புகளும் சுதந்திரமும் கொண்ட நாடு. அதிபர் பதவியும் வெள்ளை மாளிகையும் புனிதத்தின் மேல் புனிதம் கொண்டவை. அதில் சிறு தவறு நடந்தாலும் அமெரிக்க சமூகம் பொறுத்தும் கொள்ளாது. அதன் வெளிப்பாடுதான் தற்போதைய கிளிங்டன் பாலியல் விவகாரம் என்ற வகையான ஒரு தோற்றப்பாடு சுட்டிக் காட்டப்படுகிறது. இரண்டாவது கிளிங்டன்–மோனிகா பாலியல் உறவு பற்றிய அக்குவேறு ஆணிவேறாக்கிய விடயங்கள் இளம் வயதினருக்கும் பாலியல் வக்கிரம் கொண்டோருக்கும் தகுந்த தீனியாகப்பட்டு வருகிறது. அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது என்னும் முது மொழி போன்று உலகம் பூராவும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நிகழ்த்தப்படுவதற்கான பின்புல மாகவே மேற்குறித்த பிரசாரங்கள் இருந்த வருகின்றன என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ஆதலினால் நமது நாட்டின் கலாச்சார சீரழிவும் அதன் எதிரொலியான திகைக்க வைக்கும் பாலியல் வல்லுறவுகளும் கொலைகளும் எவற்றிலிருந்து வெளிவந்தவை என்று கண்டு கொள்வது அவசியம். ஏகாதிபத்திய கலாச்சாரச் சீரழிவை உரியவாறு அடையாளம் கண்டு கொள்ளாமல் அவற்றின் நச்சுத்தன ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தாமல் வெறும் போதனையால் எதுவுமே நடக்கப் போவதில்லை.

### புலிகளுடன் பேசு.....

(6ம் பக்க தொடர்ச்சி)

மட்டத்தில் தனிமைப்படுத்தும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் கண்டுள்ள வெற்றியின் ஒரு பகுதி, ஏகாதிபத்திய நாடுகள் ஏற்கனவே "பயங்கரவாதம்" பற்றியும் "விடுதலைப் போராட்டங்கள்" பற்றியும் தமது மதிப்பீடுகளை மீளாய்வு செய்ததன் விளைவானது. மறுபுறம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாகக் காணப்படுவோர் அயல்நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் இயக்கிவரும் விதமும் விடுதலைப் புலிகளுக்குச் புலம்பெயர்ந்த தமிழரிடையே உள்ள ஆதரவைக் கணிசமாகக் குறைத்துள்ளது.

இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் தம் ஆயுதங்களை கீழே போடும் வரை பேச்சுவார்த்தை இல்லை என்று கூறுவதும் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவது ஒரு முன் நிபந்தனை என்று கூறுவதும் ஒரு நாடகம். நிபந்தனையின்றி விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச வேண்டும் என்று யூ.என்.பி. தலைமை கூறுவது அதைவிட நயவஞ்சகமான நாடகம். யூ.என்.பி. அண்மையில் கூட்டிய சர்வகட்சி மாநாடு கண்ட தோல்வியும் அதன் அரசியல் நிலைப்பாடு பற்றி அதன் தலைமைப் பிரிவுகளிடையே உள்ள மோதல்களும், தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யூ.என்.பி ஆக்கபூர்வமாக எதையும் செய்யாது என்பதையும் தெளிவாக்கியுள்ளன.

அரசாங்கத்தைப் பொறுத்த வரை அதனிடம் தமிழ் மக்களது நியாயமான ஆவல்களைச் சிறிதேனும் நிறைவு செய்வதற்கான வேலைத்திட்டம் எதுவும் உள்ளதோ என்பது மிகவும் கேள்விக்கிடமாகி விட்டது. விடுதலைப் புலிகளைப் பற்றித் தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதோ அவர்களே தமிழ் மக்கள் சார்பாகப் பேசும் ஒரே சக்தியா என்பதோ அடிப்படையான பிரச்சினையில்லை. இந்த நாட்டை மேலும் மேலும் அழித்து வருகிற இப் போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது என்பதே அரசாங்கத்தின் முன்னுள்ள சவால்.

ரிவிரஸக்கள் இரண்டும் ஜயசிக்குறுவுக்கு வழி வகுத்தனவே ஒழிய அமைதிக்கு அல்ல. ஜயசிகுறு போரையும் அழிவையும் விட எதையுமே உறுதி செய்யவில்லை. போர்மூலமான சமாதானமோ வெற்றியோ பற்றிய மயக்கத்திற்கு இனி இடமில்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களது புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளை போர் நீடிக்கும் ஒவ்வொரு நாளும் இன்னும் கடினமாக்கி வருகிறது.

1957ல் ஜே.ஆர்.ஜயவர்தன பண்டா–செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துத் தொடங்கி வைத்த ஆளுங்கட்சி–எதிர்க்கட்சி நாடகம் இனியும் தொடர வேண்டுமா? அரசியல் தீர்வுக்கான தமது திட்டத்தைத் தெளிவாகவும் குழப்பத்துக்கு இடமில்லாமலும் அரசாங்கமும் யூ.என்.பியும் பகிரங்கமாக நாட்டு மக்கள் முன்னே வைத்து அதற்கான ஆதரவைத் திரட்டட்டும் எந்த அடிப்படை மீது தீர்வு தேடப்படுகிறது என்பதை யாவது நாட்டு மக்கள் அறியட்டும். ஒரு நியாயமான தீர்வு அடிப்படை முன்வைக்கப்பட்ட பின்பு அதை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்தால் தமிழ் மக்கள் அவர்களைப் பற்றிய முடிவிற்குத் தாமாகவே வருவார்கள். விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டித் தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் துன்புறுத்தப்படுகிறார்கள். தமிழ் மக்களுக்குச் சட்டத்தின் கீழுள்ள மொழியுரிமை உட்பட தொழில்வாய்ப்பு கல்வி வசதி போன்ற பல்வேறு உரிமைகளும் வேறுபடும் அளவுகளில் மறுக்கப்பட்டே வருகின்றன. இவை பற்றி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாது போனால் அதன் நோக்கங்கள் கேள்விக்கு உரியன.

யூ.என்.பியும் ஜே.வி.பியும் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும் போர் நிறுத்தம் தொடர்பாகவும் நேர்மையாகவும் நியாயமாகவும் ஒளிவுமறைவின்றியும் நடந்து கொள்ள வேண்டும். பேரினவாத அரசியல் மூலம் வடகிழக்குத் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். இதன் மூலம் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளும் சில முதலாளிகளும் அவர்களது எடுபிடிகளும் லாபம் பெற்றிருக்கலாம். பரந்துபட்டளவில் நாட்டில் வாழும் சிங்கள மக்கள் கண்டது என்ன? தேசிய இனப்பிரச்சினையை நியாயமாகத் தீர்க்க மறுத்தால் முழு நாடுமே இழந்தது அதிகம், எனவே மக்களது வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கும் இப் போர் போன்ற விஷயத்தைத் தமது அரசியல் சதுரங்க விளையாட்டாகக் கருதுவதைச் சகல தேசியவாதக் கட்சிகளும் உடனேயே நிறுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதும் பேசாதிருப்பதும் நிபந்தனைகள் போடுவதும் போடாதிருப்பதும் ஒரு கதை. எதைப்பற்றி என்ன அடிப்படையில் என்ன நோக்கத்திற்காக என்பவை பற்றிய தெளிவு அதைவிட முக்கியமானது. இத் தெளிவு இல்லாத ஆட்சியாளர் எவராலும் இந்த நாட்டை அதன் அழிவுப்பாதையினின்று மீட்க வழிகாட்ட முடியாது.

### பசறைத் தொழி

1ம் பக்க தொடர்ச்சி..

தொண்டமான் இப்போராட்டத்தை பலவீனப்படுத்தும் வகையிலும் காட்டிக் கொடுக்கும் வகையிலும் பேசிவந்தார் என்பது கவனிக்கத்தக்கது. அப்போராட்டத்தில் இ.தொ.கா பங்குபற்றவில்லை என்றும், தோட்டத்துரையை இடமாற்றம் செய்யும்படி கேட்பது நியாயமான கோரிக்கையல்ல என்றும் தொண்டமான் கூறிவந்தார். ஆனால் பதுளை மாவட்ட எம்பி சென்னனும், அங்குள்ள இ.தொ.கா.பிரதிநிதிகளும், இ.தொ.கா. தோட்டக்கமிட்டி தலைவர்களும் இ.தொ.கா தலைவர் தொண்டமானின் கருத்திற்கு மாறாக போராட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். ம.ம.மு தலைமை போராட்டத்தை முடித்துவைக்கும் பேச்சு வார்த்தையில் பங்குபற்றியதாக கூறப்பட்டபோதும் போராட்டத்தில் தயக்கம் காட்டிய நிலையிலேயே இருந்நது என்றே கூறப்படுகிறது.

எனவே 105 சம்பள உயர்வை தொழிற்சங்க தலைமைகள் காட்டிக்கொடுத்திருந்த போதும் தொழிலாளர்கள் போராட்டங்களில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர் என்பதனை பசறை போராட்டம் எடுத்துக் காட்டியுள்ளது. உறுதியான ஐக்கியப் பட்ட போராட்டத்தால் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பதை பசறைத் தொழிலாளர்கள் நிருபித்துள்ளனர். உறுதியான போராட்டங்களால் தலைமையை மாற்ற முடியும் அல்லது புதிய தலைமைகளை உருவாக்க முடியும் என்பதனை தோட்டத் தொழிலாளர்கள் நம்புகிறார்கள்.

பசறை போராட்டத்தின் படிப்பினைகள் ஏனைய தோட்டத் தொழிலாளர்களும் படிக்கவேண்டும். எதிர்காலத்திலும் போராட்டப்பாதையில் உறுதியாக முன்னேற புதிய புதிய கொள்கைகளையும், நடைமுறைகளையும் வகுத்துக்கொள்ள வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI පුදියපූමි

சுற்று 05 ஒக்ரோபர்/நவம்பர் 1998 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 24


## ஒக்ரோபர் 21 எழுச்சியின் 32வது நினைவு நாள்

சாதி ஒடுக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான புரட்சிகர எழுச்சி நாள் 1966 ஒக்ரோபர் 21 ஆகும். அவ் வீரமிகு நாள் வரலாற்றில் ஏற்கனவே தனது சுவட்டினை மிக அழுத்தமாகப் பதித்துக்கொண்டு விட்டது. அன்று எழுந்த எழுச்சியும் சிந்திய இரத்தமும் பொங்கி எழுந்த புரட்சிகர உணர்வுகளும் பின் வந்த ஒவ்வொரு போராட்டங்களிலும் திசை வழி காட்டிநின்றன. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பரந்த போராட்டங்களுக்கு அடிப்படை எழுச்சியாக எழுந்ததே ஒக்ரோபர் 21 எழுச்சியாகும். அவ்எழுச்சி காட்டிய பாதையில் அணிதிரண்ட மக்கள் போராட்டமுனைகளிலே புரட்சிகர செயல் வீரர்களாகினர். ஆண்டாண்டு காலமாக அழுத்தி வந்த சாதிய தீண்டாமை நுகத்தடியை உடைத்தெறிய முற்பட்டனர். புரட்சிகர வீரத்தழும்புகளைப் பெற்று இரத்தம் சிந்தினர். படுகாயங்கள் பெற்றனர். பதினைந்து பேர் வரை தமது இன்னுயிர்களை இழந்தனர். பலர் தத்தமது தேடிய சிறுசிறு சொத்து சுகங்களை எல்லாம் அர்ப்பணிப்பு செய்தனர். இன்றும் அப்போராட்டங்கள் வரலாற்று முன்னுதாரணம் மிக்க ஒன்றாகவே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. முப்பத்திரண்டு ஆண்டுகளின் பின்பும் சாதியமும் தீண்டாமையும் முற்று முழுதாக அழிந்தொழிந்து போய்விட்டது என எவரும் கூறமுடியாத நிலையில் வெவ்வேறு அளவுகளில் இருந்தே வருகின்றது. தொடர்ந்தும் சாதியத்திற்கு எதிரான போராட்டப் பாதையில் புதிய சூழல்களுக்கு ஏற்றவகையில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதை இவ்வேளை முன்நிறுத்துவோம்.

## மலையகத்தில் கசிப்பு அரக்கன்

### பணம் பண்ணுவது ஒருசிலர்! பாழ்படுவது தொழிலாளர்கள்!!

சாராயம் கசிப்பு போதைவஸ்து போன்றவற்றின் பாவனையால் முழு நாடுமே நாசமடைந்து கொண்டு செல்கிறது. இதில் மலையகத்தில் கசிப்புப் பாவனை நாளாந்தம் வளர்ந்து செல்கிறது. தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த சம்பளம் வேலைநாட் குறைப்பு இவற்றால் போதிய உணவும் போசாக்கும் கிடைப்பதில்லை. குளிர்ப் பிரதேச வாழ்க்கையும் வாழ்கைச் செலவைச் சமாளிக்க முடியாத கவலையும் கடன் தொல்லைகளும் போன்ற புறச் சூழல்கள் இலகுவாகவே தொழிலாளர்களை மதுவிற்கும் குடிப் பழக்கத்திற்கும் ஆளாக்கி விடுகிறது. கல்வியை இடைநடுவில் முறித்துக் கொண்டு குடும்பச் சுமைகளை மிக இளவயதில் தூக்கிக் கொள்ளும் இளைஞர்களும் குடிப்பழக்கத்திற்கு ஆளாகிக் கொள்கின்றனர். இவற்றின் காரணங்களால் ஒப்பீட்டு வகையில் மலையகத் தோட்டங்களில் கசிப்புப் பாவனை தீ போன்று பற்றிப் பரவி நிற்விறது. குறைந்த விலையில் கூடிய போதையை கசிப்பு ஏனைய குடிவகைகளை விட வழங்குகின்றது. எனவே தொழிலாளர்கள் அதற்கு அடிமையாகிக் கொள்கின்றனர். கசிப்பினுடைய தன்மையும் வேகமும் ஒருவருடைய உடல் மிக விரைவில் அழித்துக் கொள்கிறது. மறுபுறம் குடும்ப வாழ்வில் தீராச் சண்டை சச்சரவுகளையும் ஏற்படுத்தி சீரழிவை உருவாக்கி வருகின்றது. சில தோட்டங்களில் குடும்பமாகவே கசிப்புக்கு அடிமையாகிக் சீரழிந்து செல்லும் கவலைக்குரிய போக்கினைக் காணமுடிகிறது. இந்த கசிப்புப் பாவனை அதிகரிப்பதால் கசிப்பு முதலாளிகளும் அவற்றை தோட்டங்களுக்கு எடுத்துவரும் ஒரு சிலரும் குறுகிய காலத்தில் அதிக பணம் சேர்த்துக் கொள்கின்றனர். ஆனால் தொழிலாளர்களின் வாழிவோ பாழடிக்கப்படுகிறது. இக் கசிப்பு வியாபாரத்தை சிங்கள முதலாளிமாரும் தமிழ் விநியோகிஸ்தர்களும் கை கோர்த்துச் செயல் படுகின்றனர். இந்த கசிப்பு வியாபாரத்தால் அடிக்கடி சிங்கள தமிழ் இன அடிபிடிகளும் ஏற்படுகின்றன. அவையே பெரும் இன் வன்செயல்களாகவும் மாறிக் கொள்கின்றன. உரு குறிப்பிட்டவர்களின் கசிப்புப் பாவனையால் ஒரு தோட்டம் அல்லது பல தோட்டங்களே பாதிப்படைய நேரிடுகிறது. எனவே மலையகத்தை விழுங்கிவரும் கசிப்புப் பாவனை மற்றும் மதுப் பாவனைகளுக்கு எதிராக மலையக இளைஞர்கள் மாணவாகள் என்போர் ஒன்றிணைந்து திட்டமிட்ட வகையில் பலவகைச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அது மலையகத்திற்கு அவசியமான ஒன்றாகும்.

## இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் சிவில் நிர்வாகம் சாத்தியமில்லை – அரசியல் கட்சிகள் மாநாட்டில்

### புதிய இடதுசாரி முன்னணி வலியுறுத்து!

இனஅழிப்பு யுத்தத்தை உடனே நிறுத்துவதுடன் சிவில் நிர்வாகத்தை இராணுவ ரீதியாக ஏற்படுத்த முடியாது என்பதால் வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தையும் அகற்ற வேண்டும். தமிழ் தேசியத்தின் தேசிய அடையாளத்தை ஏற்றுக் கொண்டு சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, சமத்துவம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசியல் அமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதுவே அரசியல் தீர்வு காண்பதற்கான அடிப்படைகளாக அமையமுடியும்.

இவ்வாறு ப்திய இடதுசாரி முன்னணியால் வர்த்தக சமூகத்தினர் ஒக்டோபர் 22ஆம் திகதி கூட்டியிருந்த அரசியல் கட்சிகளின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும் தீர்மானங்களுடன் சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் முஸ்லீம் மக்களினதும் மலையக தமிழ் மக்களினதும் உரிமைகளும் அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனம் ஸ்ரீ லங்கா தேசிய வர்த்தக நிறுவனம் இலங்கை தேசிய கைத்தொழில் நிறுவனம் ஸ்ரீ லங்கா வர்த்தக கைத் தொழில் நிறுவனங்களின் சம்மேளனம், இலங்கை முதலாளிமார் சம்மேளனம் ஸ்ரீ லங்கா ஏற்றுமதியாளர் சங்கம் என்பவை கூட்டாக இணைந்து இனப்பிரச்சினை உட்பட பல முக்கிய பொருளாதார விடயங்களிலும் எதிர்கட்சிக்கும் அரசாங்கத்துக்கு மிடையே தேசிய இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக ஒக்டோபர் 22ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரசியல் கட்சிகளின் மாநாடொன்றை கூட்டியிருந்தனர்.



இம்மாநாட்டில் புதிய இடதுசாரி முன்னணியின் சார்பில் தோழர்கள் லீனஸ் ஜயதிலக்க(ந.ச.ச.க) இ.தம்பையா(பு.ஜ.க) வஸந்த திசாநாயக்க(தியேச) சிறிதுங்க ஜயசூரிய(ஜ.சோ.க) பற்றிக் பெர்ணான்டோ(தே.ஜ.இ) கலந்து கொண்டனர். மாநாட்டில் முன்னணியின் அறிக்கையை தோழர் லீனஸ் ஜயதிலக்க சமர்ப்பித்து உரையாற்றிய போது மேலும் குறிப்பிட்டதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பு நிர்ணய சபையை கூட்டி புதிய அரசியவமைப்பை வரைய வேண்டும். அம்முயற்சிகளில் எல்லா பிரஜைகளுடைய குழுக்களையும் இனைத்து தொழிற்சங்கங்களையும் இடதுசாரி கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தும் அதேவேளை இனவ்ாத, இராணுவாதிகளையும் தனிமைப்படுத்த வேண்டும்.

கடந்த 20 வருடங்களாக இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் திறந்த பொருளாதார கொள்கையினால் இலங்கை பொருளாதாரம் முன்னேற்றத்தை அடையவில்லை என்றும் முதன்முறையாக இலங்கையின் முதலாளிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். வேலையில்லாமை, வீடில்லாமை, பஞ்சம், கட்டமைப்பு அபிவிருத்தி மின்மை, இனப்பிரச்சினை என்பன இலங்கை முதலாளிகள் இனம் கண்டுள்ள தீர்க்கப்படாத சில பிரச்சினைகளாகின்றன. இது அவர்களின் அறிக்கையில் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையை தவிர ஏனைய பொருளாதார விடயங்கள் பற்றி வர்த்தகர்கள் சமூகம் முன்வைத் துள்ள யோசனைகள் இலங்கையில் தொழிலாளிகள், விவசாயிகளின் உரிமைகளைப் பற்றியனவாக அமைந்துள்ளன. இனவாதிகளையும் யுத்தவாதிகளையும் மேவி, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமாயின் இந் நாட்டின் தொழிலாளிகளினதும், விவசாயிகளினதும், தொழிற்சங்கங் களினதும், இடதுசாரிகளினதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகும் பொருளாதார விடயங்களில் தொழிலாளிகளினதும், விவசாயிகளினதும் உரிமைகளை பறிக்கும் யோசனைகளை முன்வைத்துக்கொண்டு மேற்படி சக்திகளினதும் ஆதரவை பெற முடியாது. இனவ்ாதிகளுக்கு எதிராக நேர்மையாக நிமிர்ந்து நிற்கக்கூடிய சக்திகளின் ஆதரவில்லாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது வெறுமையான முயற்சிக ளாகவே இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். அறிக்கையை சமர்பித்த தோழர் லீனஸ் ஜயதிலக்க பேசிக்கொண்டிருக்கும்போது மாநாட்டின் தலைமைச் குழுவினரால் இடையிடையே அதிகமாக இடையூறு செய்யப்பட்டார்.

எல்லொரும் யுத்தத்தை காரணமாக காட்டி அவரவர்களின் நிலைமைகளை பலப்படுத்திக் கொள்வது போன்று இலங்கையின் முதலாளிகளும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டு இந்நாட்டின் தொழிலாளிகளையும், விவசாயிகளையும் சக்தியற்றவர்க ளாக்கும் உள்நோக்கத்துடன் செயற்படக் கூடாது என்ற அடிப்படையில் அமைந்த புதிய இடதுசாரி முன்னணியின் அறிக்கை மாநாட்டின் தலைமைக் குழுவின ருக்கு பெரும்பிரச்சினையாக இருந்ததே மேற்படி இடையூறுகளுக்கு காரணமாகும் என்பதனை விளக்கிக்கொள்ள முடிந்தது.

## வடக்கிலிருந்து துரத்தப்பட்ட முஸ்லீம்களின் கண்ணீரில் கடந்த எட்டு ஆண்டுகள்

இலஙிகையில் மொழி ரீதியான தமது தாய் மொழியாகத் தமிழைக் கொண்டவர்கள் [illegible]லீம் மக்கள். அத்துடன் வீடக்கு கிழக்கில் மிகவும் செறிவாகக் கொண்டு கொண்டு தமது வாழ்வியலை நடாத்தி வந்தவர்கள். அதனால் தமிழ் பேசும் மக்கள் என்ற பெரும் பிரிவில் அவர்களும் உள்ளடக்கப்பட்டு வந்தனர். இத கடந்த கால நிலைமை. ஆனால் கடந்த இரண்டு தசாப்தங்களில் தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் திட்டமிட்ட வகையில் மோதல்களும் பிளவுகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆளும் அதிகார சக்திகள் மட்டுமின்றி இனவிடுதலைப் போராட்ட சக்திகளும் முஸ்லீம்கள் மத்தியில் உள்ள சுயநல சக்திகளும் மாறிமாறி மேற்கூறிய பிரிப்பு வெலைகளைச் செய்து கொண்டனர். அதன் பாரிய எதிர்விளைவை இன்று வடக்கு கிழக்கிலே காண முடிகிறது. மேற்கூறிய பிளவை மேன் மேலும் வலப்படுத்திய ஒரு சம்பவமே 1990ல் முஸ்லீம்களுக்கு எதிராக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. அதாவது வடக்கில் இருந்து சகல முஸ்லீம் மக்களும் சில மணிநேர அவகாசத்தில் வெளியேற்றித்த துரத்தப்பட்டனர். இன்றுவரை அதற்கான போதிய காரணத்தை அவ்வாறு செய்தவர்கள் கூறிக் கொள்ளவில்லை.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்து துரத்தி வெளியேற்றப்பட்ட ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட முஸ்லீம் மக்கள் இன்னமும் தமது பாரம்பரிய சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வில்லை. அவர்களது. வாழ்க்கை சிதைந்து சின்னாபின்னமாகிய ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. தமிழ் மக்களோடு ஒன்றாகவே பன்னெடும் காலம் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்கள் மேற்படி துரத்தியடிப்பால் பிரிக்கப்பட்டனர். இன்று வரையான அவர்களது வாழ்வு அகதி முகாம்களிலும் தனித்தனி இடங்களிலும் இரண்டாம் தர வாழ்வாகவே இருந்த வருகின்றது. வேலைஇன்மையிலும் வறுமையிலும் நோயிலும் கல்வி பெற முடியாமையிலும் கண்ணீர் வாழ்வாக்கி கொண்டே செல்கிறது. இதணையிட்டு ஆட்சியில் இருப்போருக்கோ அன்றி அவர்களுக்கு ஆலவட்டம் பிரிப்போருக்கோ துளியளவும் அக்கறை இல்லை. அதுமட்டுமின்றி தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்க்க வேண்டியவர்களான விடுதலைப் புலிகளுக்கும் இந்த மக்களது எதிர்காலத்தில் அனுதாபப் புரிந்துணர்வு இருக்கவில்லை.

இத்தனைக்கும் மத்தியில் இடம் பெயர வைக்கப்பட்ட இம் மக்களை வைத்து எவ்வகை அரசியல் சுயநல ஆதாயம் பெறலாம் என்றே சிலர் எண்ணிச் செயற்பட்டு வந்துள்ளனர். எனவே வடக்கே தமது தாயகம் எனபதிலும் தமிழ் மக்களோடு வாழ்வதே தமது எதிர்காலம் என்பதிலும் சொந்த இடங்களுக்குச் திரும்பிச் செல்வதற்கு ஏற்ற சூழலை அரசும் விடுதலைப் புலிகளும் ஏற்படுத்தி தரவேண்டும் போன்ற முக்கிய கோரிக்கைகளையே வடக்கு முஸ்லீம்கள் இன்றும் முன்வைக்கிறார்கள். அவர்களது கேரிக்கைகளில் நீதியும் நியாயமும் உண்டு. அவற்றை வென்றெடுக்க அவர்களோடு கைகோர்த்து நிற்பது ஒவ்வொரு தமிழ் மகனது கடமையும் ஆகும்.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு லக்ஸ் கிராபிக் (பிரை) லிமிட், 98, விவேகானந்த மேடு, கொழும்பு 13.